Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 25.

ஜூலு 'கலக'த்தில் நான் பல அனுபவங்களைப் பெற்றேன். நான் பல விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கும் எனக்குச் சமயம் வாய்த்தது. போயர் யுத்தத்தின் போதும் நான் யுத்தத்தின் கொடுமைகளைப் பற்றி அவ்வளவாக அறிந்துகொள்ளவில்லை. ஜூலு 'கலக'த்தை யுத்தமென்று கூறமுடியாது. அது மனித வேட்டை என்றே கூறலாம். இதுதான் பல ஆங்கிலேயர்களுடைய அபிப்பிராயமுமாகும். சோல்ஜர்களின் குண்டுச் சப்தங்களைக் கேட்டுக் கொண்டு அவைகளின் மத்தியில் வசிப்பதும் மிகத் தொந்தரையானதாகவே இருந்தது. ஆனால் காயமுண்ட ஜூலுக்களைப் பராமரிப்பதே என் வேலையாக இருந்தபடியால், நான் ஒருவாறு திருப்தியாகவே இருந்தேன். நாங்களில்லாவிட்டால் ஜூலுக்களைக் கவனிப்பவர் யாருமில்லையென்பதை யுணர்ந்தேன். எனவே, என் வேலை எனக்கு இன்பமானதாகவே இருந்தது.

ஆயினும் ஒருவரை ஒரே விஷயத்தில் கவனமாக இருக்கச் செய்வதற்கு அவசியமானவை இன்னும் பல உள. அப்பிரதேசம் குறைவான ஜனத்தொகையை உடையது. குன்றுகளுக்கும், பள்ளத் தாக்குகளுக்கு மிடையே ஆங்காங்கு ஜூலுக்கள் சிதறுண்டு வசித்து வந்தனர். காயமுண்ட ஜூலுக்களைச் சுமந்து கொண்டோ, கொள்ளாமலோ அந்த நிசப்தமான தனி இடங்களில் பிரயாணம்செய்து வந்தபோது நான் சிற்சில சமயங்களில் ஆழ்ந்த சிந்தனையில் இருந்துவிடுவதுண்டு.

அப்படிப்பட்ட சமயங்களில் பிரமசரியத்தைப்பற்றியும், அதன் விவரங்களைப் பற்றியும் ஆராய ஆரம்பித்தேன். எனக்கு அதில் அதிக நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. நான் இதைப்பற்றி என் நண்பர்களுடன் விவாதித்தேன். அப்போது நான் பிரம சரியத்தின் மேன்மையைப்பற்றி அவ்வளவாகத் தெரிந்துகொண்டிருக்க வில்லை. ஆனால் மானிட சமுகத்துக்குச் சேவை செய்ய வேண்டுமாயின் பிரம சரியத்தின் துணையில்லாமல் முடியாதென்பதை யுணர்ந்தேன். மேலும் நான் இல்வாழ்க்கை இன்பத்திலாவது, பிள்ளைகளைப் பெறும் வேலையிலாவது ஈடுபட்டிருந்தால் அப்போது நான் செய்து வந்த அவ்வளவு அதிகமான சேவையைச் செய்திருக்க முடியாது என்பதை அறிந்தேன். சுருங்கக் கூற வேண்டுமாயின் பிரம சரியத்தின் உதவியில்லாமல் பாரமார்த்திக விஷயத்திலும், தேகவலிமை பெறும் விஷயத்திலும் அபிவிருத்தியடைய முடியாது. உதாரணமாக அப்படிப்பட்ட சமயத்தில் என் மனைவி கர்ப்பவதியாக இருந்திருப்பாளாயின் நான் அப்போது செய்த அந்த சேவையைச் செய்திருக்க முடியாது. பிரம சரிய விரதத்தை அனுஷ்டிக்காவிடின் சமுக சேவை செய்வதற்கும், குடும்பசேவை செய்வதற்கு மிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுவிடும். ஆனால் பிரம சரியத்தை அனுஷ்டித்தால் இருவகையான சேவைகளையும் ஒழுங்குடன் செய்துவரலாம்.

இவ்வாறு நான் சிந்தித்தபடியால் அதை அனுஷ்டிப்பதென்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள விரும்பினேன். அவ்வாறு விரும்பியதே எனக்கு அதிகமான சந்தோஷத்தைக் கொடுத்தது. இவ்வாறெல்லாம் நான் தேகக் கஷ்டமும், மனக் கஷ்டமும் அடைந்து கொண்டிருந்தபோது 'கலக'த்தை அடக்கவேண்டிய வேலை முடிந்துவிட்டதென்றும், நாங்களனைவரும் விரைவில் வீடு திரும்பலாமென்றும் ஒரு செய்தி எனக்கெட்டியது. இச்செய்தி எட்டிய இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் நாங்கள் எங்கள் வேலையினின்றும் திருப்பி யனுப்பப்பட்டோம். எனவே சில தினங்களுக்குள் நாங்கள் எங்கள் வீடுகளுக்கு வந்து சேர்ந்தோம். நான் வீட்டுக்கு வந்து சேர்ந்த சிறிது காலத்திற்குள் கவர்னரிடமிருந்து எனக்கொரு கடிதம் கிடைத்தது. அதில் அவர் என்னுடைய வைத்திய உதவிப்படையின் ஊழியத்தைப் பாராட்டுவதாக எழுதியிருந்தார்.

நான் போனிக்ஸுக்கு வந்து சேர்ந்ததும் பிரமசரியத்தைப்பற்றிய என் அபிப்பிராயத்தை சகன்லால், மகன்லால், வெஸ்ட் முதலியோரிடம் கூறினேன். அவர்களும் அந்த அபிப்பிராயத்தை விரும்பினார்கள். பிரம சரியத்தை அனுஷ்டிப்பதாகப் பிரதிக்ஞை செய்துகொள்வதாயும் கூறினார்கள். ஆனால் அதை அனுஷ்டிப்பதில் உண்டாகும் பல கஷ்டங்களைப்பற்றியும் எடுத்துரைத்தார்கள். அவர்களுக்குள் சிலர் தைரியமாக பிரமசரிய விரதத்தை அனுஷ்டிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். சிலர் வெற்றி பெற்றதையும் நான் அறிவேன்.

நானும் ஆயுட்காலம் வரை பிரமசரிய விரதத்தை அனுஷ்டிப்பதென்று விரதங்கொண்டேன். ஆனால் பின்னால் நான் அனுபவித்த அத்தனைக் கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடுமென்று அப்போது நான் உண்மையில் அறியவில்லை என்பதை ஒத்துக்கொள்ளுகின்றேன். இன்றளவும் இன்னும் சில கஷ்டங்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன; ஆனால் அத்தகைய பிரதிக்ஞையின் மேன்மை நாளுக்குநாள் அதிகமாக விளங்கிவருகிறது. பிரமசரியத்தை அனுஷ்டியாத வாழ்க்கை மிருக வாழ்க்கைக்கும், உற்சாக மற்ற வாழ்க்கைக்கும் சமமென்றே நான் கருதுகின்றேன். மிருக சுபாவமுடையவன் இயற்கையாகவே தன்னடக்கத்தைப் பெறமாட்டான். எனவே ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு தன்னடக்கத்துடன் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் மனிதன் என்னும் பதவிக்கு உரியவனாகின்றான். பிரமசரியத்தைப்பற்றி நம் மத கிரந்தங்களில் சிலாகித்து எழுதப்பட்டிருப்பவை மிகை படக் கூறியவை என்று நான் ஒரு காலத்தில் கருதினேன். ஆனால் இப்போது அவைகள் உண்மையானவையே யென்றும், அனுபவத்தின் மீதே கண்டுபிடிக்கப் பட்டவைகளென்றும் உணர்கின்றேன்.

மானிடருக்கு அதிக வலிமையையும் உற்சாகத்தையும் தரக்கூடிய மேன்மை பெற்ற பிரமசரிய விரதம் எளிதில் அனுஷ்டிக்கக் கூடிய தன்றென்பதையும், தேக சம்பந்தத்துடன் மட்டும் நிற்பதில்லை யென்பதையும் கண்டு கொண்டேன். இந்திரிய நிக்கிரகம் செய்வதில் பிரமசரியம் ஆரம்பித்த போதிலும் அது அத்துடன் நிற்கவில்லை. பூரண பிரமசரியத்துக்கு மனத்தாலும் தீய சிந்தனையை எண்ணலாகாது. உண்மையான பிரமசாரியொருவன் தன் தேக சம்பந்தமான இச்சைகளைப் பொருட்படுத்த மாட்டான். அவன் அவைகளை மதிப்பானாயின் அவன் உண்மை பிரமசாரியாவதற்கு இன்னும் அதிக படிகளைக் கடக்கவேண்டியவனாகிறான்.

என் சம்பந்தப்பட்ட வரையில் தேக சம்பந்தமான பிரமசரியமும் கஷ்டமானதாகவே காணப்பட்டது. ஆனால் இப்போது அத்தகைய குறையினின்றும் நான் விலகி விட்டேனென்று நிச்சயமாகக் கூறுவேன். ஆயினும் பிரமசரியத்துக்கு அவசியமான மனோ உறுதியில் நான் இன்னமும் பூர்த்தியான வெற்றியைப் பெறவில்லை. அதற்கு எனக்கு மனமில்லையென்றாவது முயற்சியில்லை யென்றாவது கூற முடியாது. எனினும் அத்தகைய தீய எண்ணங்கள் எங்கிருந்து உதயமாகின்றன என்பதையே அறிய என்னால் முடியவில்லை. ஆயினும் அப்படிப்பட்ட விரும்பத்தகாத எண்ணங்களையொழிப்பதற்கு வேண்டிய மார்க்கம் ஒவ்வொருவராலும் கண்டு பிடிக்க முடியுமென்பதே என் அபிப்பிராயம். ஆனால் ஒவ்வொருவரும் அதைக்கண்டு பிடிக்க முயற்சிசெய்ய வேண்டும். மகான்களும் மகரிஷிகளும் அவர்களுடைய அனுபவங்களை நமக்கு முன் மாதிரியாக வைத்துவிட்டுப் போயிருக்கின்றனர். ஆனால் அவைகளை அனுஷ்டிக்கவேண்டிய முறைகளைக் கூறிவிட்டுப் போகவில்லை. இத்தொழில்களைச் செய்வதினின்றும் விடுதலை பெறுவதற்கு அவன் அருள் முக்கியமாக வேண்டுமாதலின் பெரியோர்கள் ஸ்ரீ ராம நாமம் போன்ற மந்திரங்களை நமக்கு அறிவுறுத்தி யிருக்கிறார்கள். இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமானாலொழிய சிந்தனைகளின் மீதும் பூர்ண ஆதிக்யத்தைப் பெறுவது அசாத்தியமாகும். இதையே எல்லா மத கிரந்தங்களும் போதிக்கின்றன. பிரமசரிய விரத அனுஷ்டானத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நானும் ஒவ்வொரு நிமிஷமும் அதன் உண்மைகளை அனுபவ வாயிலாக அறிந்து வருகிறேன்.

என் அனுஷ்டானத்தில் நான் செய்துவரும் முயற்சிகளையும், அபிவிருத்திகளையும் பற்றிப் பின் வரும் அத்தியாயங்களில் விவரமாகக் கூறுவேன். ஆனால் அவ்விரதத்தை அனுஷ்டிப்பதை நான் எவ்வாறு ஆரம்பித்தேன் என்பதை மட்டும் கூறிவிட்டு இவ்வத்தியாயத்தை முடித்துக்கொள்கிறேன். விரதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்னும் ஆரம்ப உற்சாகத்தில் அவ்வாறு அனுஷ்டிப்பது எளிதானதே என்று கண்டேன். என் வாழ்க்கையில் நான் செய்த முதல் மாறுதல்என்னவெனின், ஒரே படுக்கையில் மன் மனைவியுடன் படுப்பதையும், அவளுடன் அந்தரங்கமாகப் பேசுவதையும் விட்டுவிட்டேன். நான் 1900-ம் வருஷம் முதலே சிறிது சிறிதாக அனுஷ்டித்து வந்த பிரம சரியத்தை பூர்ண வெற்றியுடன் ஆரம்பிப்பதென்று 1906—ம் வருஷத்தில் பிரதிக்ஞை செய்துகொண்டேன். அது முதல் என் விரதத்தை நிறைவேற்ற சர்வ ஜாக்கிரதையுடன் நான் முயற்சித்தே வருகிறேன்.

---

# விஷ்ணுபக்தர் ஸ்ரீகபீர்தாஸரும், மிருக பலியும்.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையிலிருந்து.)

பூர்வம் அஸ்தினபுரத்திற்கு அடுத்த டில்லி ராஜதானியில் மொகலாய சக்கரவர்த்திகள் ஆண்டு வந்த காலத்தில் முகமதிய மதத்தில் அவதரித்த கபீர் என்ற ஸாது ஒருவர் இருந்தார். அவர் விஷ்ணுபக்தர். அகையால் உபந்நியாசங்களும் பஜனை முதலானவையும் செய்து பாமர ஜனங்களுக்கு விஷ்ணு பக்தி உண்டாகும்படி செய்து வந்தனர். அப்படியிருக்குங்கால், ஒரு நாள் பக்ரீத் பண்டிகையை அனுசரித்து முகமதியர்கள் ஒரு கன்றுக் குட்டியை ஸம்ஹரிக்கச் சித்தமாயிருக்கையில், கபீர் அங்கு போய்ச் சேர்ந்தார். கன்றுக் குட்டியைத் தாம் பிடித்துக் கொண்டு, அவர், கூடியிருந்த முகமதிய மௌல்விகளுக்கு "அஹிம்ஸா பரமோ தர்மஹ" என்ற நீதியை போதிக்கத் தொடங்கினார்.

அப்போது முகமதியர்கள் அவர் சொன்ன மொழியைக் கேளாமல் இருப்பதைக் கண்டு கன்றுக் குட்டியை தடவிக் கொடுத்துத் தன்னுடைய விஷ்ணுபக்தியின் மஹாத்மியத்தினால் அதைப் பேசச் செய்தார். அந்தக் கன்றுக் குட்டி தான் பூர்வ ஜன்மத்தில் மனிதனாகப் பிறந்து இதே மாதிரியாக ஒரு கன்றுக் குட்டியைக் கொன்ற பாவத்தினால் தற்சமயம் வெட்டுண்டு போவதாகச் சொல்லிற்று. அப்போது முகமதியர்கள் பயந்து கன்றுக் குட்டியைக் கொல்லாமல் விட்டு விட்டு கபீரிடம் வந்து நின்றனர். அப்போது கபீர் அவர்களுக்குத் தகுந்த நீதிகளைப் போதித்து அடியில் கண்ட ஓர் கதையைச் சொன்னார்.

பூர்வகாலத்தில் ஓர் தேசத்தை ஆண்டுவந்த ஓர் அரசன் தன்னுடைய பிரதான மந்திரியோடு அவ்வூருக்கு அடுத்தாற்போல் உள்ள ஓர் காளிதேவியைப் பிரார்த்தித்துவந்தான். அவ்வூரிலிருந்த ஜனங்களையெல்லாம் ஒவ்வொரு நாளும் வீடுதோறும் முறையாக தவறாமல் ஒரு ஆட்டை அல்லது மாட்டை காளிகாதேவிக்கு பலி கொடுத்துப் பொங்கலிட்டு அம்மனுக்குத் திருப்திசெய்ய வேண்டுமென கட்டளையிட்டான். அப்படி சில நாட்கள் நடந்துவருகையில், அம்மனுக்கு நரபலி கொடுத்தால் விசேஷ ஐஸ்வரியம் உண்டாகுமென்று மந்திரியிடம் ஒருவர் சொல்ல, அதை மந்திரி அரசனுக்குத் தெரிவித்தான். அரசன் அதே மாதிரியாக வருஷத்தில் ஒரு நாள் குறிப்பிட்டு அந்நாள் நள்ளிரவில் பலி கொடுத்துக் கொண்டு வந்தனன். அம்மாதிரி சில வருடங்கள் நடந்தன. அரசனும் அமைச்சனும் ஒருநாள் இராத்திரி அம்மனை பூஜை செய்து கொண்டிருக்கையில் அன்றைய தினம் நரபலி கொடுக்க வேண்டிய நாளாக ஞாபகத்திற்கு வந்தது. அப்போது மந்திரி அச்சமயத்தில் வேறு ஆள் அகப்பட சாத்தியமில்லாமல் போனதால் தன்னைப் பலி கொடுக்க வேண்டுமென அரசனை வேண்டிக் கொண்டான். அதற்கு அரசன் தனக்கு அத்யந்த சிநேகிதனான மந்திரியைக் கொல்ல மனமில்லாமல் இருவரும் யோசித்து, அந்தக் கோவிலில் பூஜை செய்யும் பூசாரியைப் பலி கொடுத்துவிடலாமெனத் தீர்மானித்தார்கள். உடனே அந்தப் பூசாரியிடம் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்து அவன் பிள்ளைக்கு பத்து கிராமங்கள் இனாமளிப்பதாகச் சொன்னவுடனே, பூசாரியின் பிள்ளை தன் தகப்பனைப் பலி கொடுக்கலாமென ஒப்புக் கொண்டான். பூசாரி வேறு விதியில்லாமல் தான் குளத்தில் ஸ்நானம் செய்து, பூஜை செய்து கொண்டு காளிகா தேவியின் ஸந்நிதானம் போய், தான் இத்தனை நாட்கள் தேவியை பக்தி சிரத்தையுடன் பூஜை செய்ததற்கு பலன் இதுதானோ வென்று சொல்லி, கோவென்று கதறினன்.

அந்தக் கூக்குரலைக் கேட்ட காளிகா தேவி பூசாரிக்கு பிரசன்னமாய் அடியில் கண்ட விஷயங்களைப் பூசாரிக்குத் தெரிவித்தாள்:—நீ போன ஜென்மத்தில் இரண்டு ஆடுகளை ஒரே காலத்தில் எனக்கு பலி கொடுத்து வெட்டின பாபத்தினால் நீ இன்றைய தினம் வெட்டுப்படப்போகிறாய். அரசனும் மந்திரியும் மறு ஜென்மத்தில் இதே மாதிரியாக வெட்டுண்டு போகிறவர்கள். இப்படி ஆடு மாடுகளை வெட்டி நரபலி கொடுத்து என்னை பூஜிக்கிறவர்கள் கொலை செய்த பாபத்திலிருந்து நீக்கப்பட மாட்டார்கள். அப்படி என் கோவிலில் இந்த பலி முதலானதைக் கொடுத்து இரத்தத்தினால் அசுத்தம் செய்து என்னை திருப்தி செய்வதாக நினைப்பவர்கள் மஹா பாவிகள். எனக்குச் சம்மதமில்லாக் காரியங்களை அவர்களுடைய சொந்த அபிலாசங்களை நிறை வேற்றிக் கொள்வதற்காகச் செய்கிறதினால் பாபத்திற்கு உடன்பட்டு, என்னுடைய அதிருப்தியை யடைந்து, அநேக குரூர வியாதிகளினால் பீடிக்கப்படுகிறார்கள் என்றும் இந்த அரசனும் அமைச்சனும் மறு ஜென்மத்தில் வெட்டுப்படுவார்கள் என்றும் சொல்லி மறைந்தனள்.

இவற்றை யெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த மந்திரி அரசனுக்குத் தெரிவிக்க, அரசன் நடுநடுங்கி பயந்து, காளிகாதேவியைப் பிரார்த்தித்து, உயிர் பலி கொடுக்காமலே தன் நகரத்தை யடைந்து, மறு நாள் முதல் ஜீவ ஹிம்சை செய்து பலி கொடுக்காவண்ணம் தண்டோராப் போட்டு, ஜீவ ஹிம்சை செய்து பலி கொடுக்கிறவர்களை தக்க தண்டனை கொடுத்து, ஜீவ ஹிம்சையை நிராகரித்து, அபிஷேகம், அர்ச்சனை, தூப தீப அலங்கார நைவேத்தியங்களால் காளிகாதேவியை பூஜிக்கும்படி ஜனங்களுக்குக் கட்டளை யிட்டான். அன்று முதல் அவ்வூரிலுள்ளோர்கள் குரூர வியாதிகளால் பீடிக்கப்படாமல் எல்லோரும் அம்மனை விதிப்படி பூஜித்து, சுகவாசிகளாக வாழ்ந்து வந்தார்கள்.

இப்படி கபீர் மௌல்விகளுக்கும் இதர தன் ஜனத்தாருக்கும் எடுத்துச் சொன்னதைக் கேட்டு அவர்கள் கன்றுக் குட்டியைக் கொல்லாமலே கபீருடைய மகிமையைப்பற்றிப் பேசிக் கொண்டே தங்கள் வீடுகள் போய்ச் சேர்ந்தார்கள். கபீரும் கன்றுக் குட்டிக்கு பிராணரக்ஷணை செய்து சந்தோஷத்தை யடைந்து பஜனை செய்து கொண்டே புளகாங்கிதராய் வீடு சேர்ந்தார். ஆகவே ஆடு கோழிகளை அம்மன் பேரைச் சொல்லி பலியிட்டுப் பாவத்தை ஏற்காது சத்காரியங்களைச் செய்து கடவுளது திருவருட்கிருபையைப் பெற வேண்டுகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## பொழுதுபோக்கு.

(போய்யில்லான் பொறித்தது.)

பற்பல விடங்களில் விவாக சம்பந்தம் வியப்பிற்கும் விசனிப்புக்கும் இடந்தராகிற்கின்றது. பணப்பித்தேறிய பேதையர் தம் அரும் மகடூஉக்களை—சுதந்திரமற்ற சுவர்ண சொருபங்களை விவாகப் பெயரால் விற்பனை செய்து வருகிறார்கள். குணத்தில் எக்கேடுற்றிருந்தாலும் பணம்மட்டும் கனமாயிருந்தால் போதுமென்ற கருத்து மேற் கொண்டிருக்கிறார்கள். குணந்தான் தவிர்ப்பினும் பருவமேனும் ஓர்கின்றார்களா? இல்லை இல்லை. பல்விழுந்த கிழவர்களும் பணம் கொண்டு மணங்கொண்டே வருகிறார்கள். எவ்வளவு பணம் கொட்டினும் அக்கிழவர்கள் மணத்திற்கேற்ற வாலிப நிசையடையப்போமோ? ஐயோ பரிதாபம்! பெண்ணின் கதியென்ன? தனக்கெனச் செய்யும் ஒரு காரியத்திலும் சுதந்திரமில்லாக் குறையால் அவதிக்குள்ளாகிறாள். இவ்வழியில் தம் பெண்களுக்கு—அரும் மருந்தன்ன அணங்குகளுக்கு பாதக மிழைக்கும் பேதைப் பெற்றோரை என்னென்று வழுத்துவது?

* * *

பெண்டன்மை ஆண்டன்மை யென்பதற்கு உள்ளர்த்தம் மென்மையும் கடினமுமேயாம். மென்மையுள்ள விடத்தே இளக்கமிருக்கிறது. இளக்கமே இரக்கமாகும். இதனால் பெண்ணினமே ஆணினத்தைப் பார்க்கிலும் இரக்கத்திற்கு அதிக இருக்கை தருவதாகும். உலகவியலிலும் இவ்வுண்மைதான் காணக்கிடக்கின்றது. பெண்ணுக்கே கிருபை சார்ந்ததாகக் காணலாம். அருள் பொறுத்தமட்டிலும் பெண்ணினமே உன்னத பீடத்திற்குரித்தெனக் முடிவுகொள்ளல் சால்பு. இவ்வினத்தார்களின் நிலையாது? வன்மைகொண்ட ஆணினத்திற் கடங்கி அதன் தயவை எதிர்நோக்கி யிருக்கிறார்கள். இவர் மாட்டு ஆணினம் மென்மையே புகுத்தி மென்மையாயே நடந்துகொள்ளுமாக.

* * *

பெற்றோர்கள் தம்மக்கள் வாலிபப் பருவம் எய்தியவுடன் இல்வாழ்க்கையின்பம் மாந்த விவாகம்முடித்துவைப்ப தியல்பு. ஆனால் சில குடும்பங்களில் பெற்றோர்களுக்கு, இந் நோக்கொடு முடித்த விவாக காரணமாயே விபரீத புத்தி மேலாடி பிள்ளைகளை விரோதித்து விடுகிறார்கள். சதிபதிகள் ரதிமதன்வாழ்வு நடத்த வேணுமென்றிருந்த பெற்றோரே பின் இவ்வாழ்க்கை கண்டு குரோதம் கொண்டு விடுகிறார்கள். இவரென்ன பெற்றோர்கள்!

பிள்ளைகளும் கள்ளமில்லாதவர் என்று சொல்லுவதற்கில்லை. சிலர் பெண்டாசையே அண்ட வாசமாய்க் கொண்டு பெற்றோர்களைத் திரஸ்கரித்து விடுகிறார்கள். பிள்ளைப் பேற்றாலடைந்த பயனிது தானோ வெனப் பெற்றோர்கள் தலையில் கை வைத்தழவேண்டி முடிந்து விடுகிறது. இப்பிணக்குகளின்றி பெற்றோர் பிள்ளைகளினுடைய கருத்தொரு மித்த இல்வாழ்க்கையே நல்வாழ்க்கையாம்.

* * *

சுயமரியாதை! சுயமரியாதை!! என்ற சப்தம் தொனித்துக்கொண்டே யிருக்கிறது. இத்தொனி செவிமடுத்தார் யாரும் புத்துணர்ச்சிபெற்று விடுவதும் விளக்கமாயிருக்கிறது. இவ்வுணர்ச்சி இதுகாறும் அநியாயத்திரையால் மறைவுற்றிருந்திருக்கிறது. ஒரே மானிடவர்க்கத்தில் ஏற்றத் தாழ்வு கொள்வது நியதியா? இது பற்றி மானிடர்க்குப் புத்தி கற்பிக்க ஏனைய ஜீவராசிகளுக்கு மனிதனுடன் பேசும் சக்தி இறைவன் தராது போனது துர்லபமே! ஒரு காலத்தில் அநியாய மொரு பக்கமும் அறியாமை யொரு பக்கமும் இருக்க ஏற்றத் தாழ்வேற்பட்டது— சுயமரியாதை குன்றியது. எந்த ஒரு தீய காரியமும் நீடித்திரா தென்பது உலக வழக்கு. அவ்வழக்கை மெய்ப்பிக்கவே நாட்டில் சுயமரியாதை ஜோதிச் சுடர் எரிய ஆரம்பித்திருக்கிறது. இவ்வொளிகண்டு ஏற்றத்தாழ்வு வௌவால்கள் கண்ணொளி கெட்டு அங்குமிங்கும் பறந்தடித்து விழுகின்றன.

* * *

ஸ்தலஸ்தாபன ஆட்சி முறை ஜனங்களின் க்ஷேமத்தைக் கோரியதென்பது வெளிப்படை. அவ்வாட்சியினின்றும் ஜனங்களுக்கென்று அள்ளித்தட்டுவதொன்றில்லை. எல்லாம் ஜனங்களிடமிருந்தே பணம்பெற்று பிரதிபலன் செய்கிறார்கள். இதற்கும் குதர்க்கம் சில விடங்களில் நடந்து வருவதாகத் தெரிகிறது. ஜன சௌகரியங்கருதி சில குறைகள் தவிர்க்கக் கேட்டால் நிராகரிக்கப்படுகிறதும், காலக் கவனிப்பொழிந்த பாடுமாயிருக்கிறது. காரணம், அவ்வாட்சிக் காரர்கள் ஜனங்களாலேயே பதவி கிடைத்தது என்பதை மறந்து மமதை கொண்டுவிடுகிறார்கள். இவர்கள் செய்கை கண்டித்தற்குரியது என்பது மிகையோ? இவர்களின் அதிகாரம் ஓர் குறிப்பிட்ட காலம்மட்டும் தானே! மறுதேர்தல் வரும்போது இவர்களை யார் நோக்குவர்? இவர்கள் ஜனங்களிடம் வாக்குரிமை வாங்கு கையில் எத்துணை நல்வார்த்தை நவின்றிருப்பர்! ஸ்தானம் ஏறிக்கொண்ட க்ஷணத்தே ஜனங்கள் ஞாபகம் இல்லாதுபோகும் போலும்! ஆகையால் ஜனங்கள் இத்தகையாளர்களுக்கு வாக்களித்து ஏமாந்து போகாமல் உண்மை யுழைப்பாளிகளுக்கே வாக்களித்து நலனடைவார்களாக.

* * *

நாட்டில் மோட்டார் வண்டிகள் பெருத்துவிட்டன. அவ்வண்டிகள் செய்யுமிடத்தும் நூதனமுறையில் முன்னையநாளைப்பார்க்கிலும்சரஸவிலையில் அமிதமாகச்செய்யும் ஏற்பாடாகிவிட்டது. எனவே இன்னும் எத்தனை வண்டிகள் நாட்டுக்குள் புகுரக் காத்திருக்கின்றனவோ! பிரயாணச்சுளுவு பொறுத்தமட்டிலும் வரவேற்கவேண்டியதுதான். ஆனால் இன்னொன்றுக்கல்லோ வெறுக்க வேண்டிய திருக்கிறது. என்னென்பரோ? பாட்டைகளில் போகும் பாதசாரிகளுக்கும், ரோட்டுகளில் நடமாடும் ஜனங்களுக்கும் உயிர்க்காளியாயன்றோ விருக்கின்றன! வண்டியோட்டிகள் லைஸென்ஸ் எடுத்து விட்டோம்; இனியேது கேள்வி முறை யென்ற மனப்பான்மையுடன் ஓட்டி வருவதாகவே பெரும்பாலும் அறியக் கிடக்கின்றது. எத்தனை பேர்கள் நசுக்குண்டிறந்திருக்கிறார்கள்! எத்தனைபேர்கள் அங்கவீனமடைந்திருக்கிறார்கள்! காரணம் என்ன? வண்டியோட்டிகளின் கவன ஈனமே. இது பற்றிய வழக்கு தொடரப்பட்டால் சொற்ப தண்டனையுடன் முடிவாகி விடுகிறது. இனி இறந்தவர்கள், காயம் பட்டவர்கள் மேல் குற்றம் சுமத்தப் படும்போலும்! கவர்ன்மெண்டார் மோட்டார் விபத்துகள் பற்றி கவனித்து தக்கமாதிரி நடந்துகொள்ளாதிருப்பின் ஜனங்களுக்கு ஆபத்து தேடிக் கொடுக்கப் பிரியமுள்ளவர் என்று கூசாமல் சொல்லலாம்.

* * *

நம் இந்தியாவிற்கு, சமீபத்தில் ராயல் கமிஷன் வரப்போகிற தென்பது யாவருமறிந்த தொன்று. கமிஷன் பூராவும் வெள்ளைமயமாயிருத்தலான், ஏதோ மர்மம் செருகியதாகவே கொள்ளல்வேண்டும். இக்கமிஷன் ஸ்தாபகமாவதன் பயனால் இந்தியரின் எஞ்சிய உரிமையும் பறி படப் போகிறது என்பது உண்மை. பல பூனைகள் நக்கி விட்டு கொஞ்சம் மிஞ்ச வைத்துப் போன உரி நெய்யை ராயல் கமிஷன் பெரும் பூனை முற்றிலும் நக்கி விடுவதற்காக வீடு நுழையப்பார்க்கிறது. மீந்த உரிநெய்யை (உரிமையை)ப்பாதுகாப்பதற்காகவாவது இப்பூனையை விரட்ட வேண்டும். எங்கும் சூ! சூ!! என்றுவிரட்டும் சப்தம் கேட்டுக்கொண்டுதானிருக்கிறது. ஒரு சிலர் இப்பூனை எலிபிடித்து கலந்தரவல்லவா வருகிறது என்று சொல்லுகின்றனராம். இவர்கள் இப்பூனைக்குத் தோழர்போலும்! எலி பிடிக்க வந்த பூனையென்று நம்புத் கூடாது. உரி நெய்யை நக்க வந்த பூனையேயாகும். இனி வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தால் பூனை வீடு நுழைந்து சரேலென உரிமேல் பாய்ந்துவிடும். ஆகையால் எல்லோரும் ஏகோபித்தவர்களாய் பூனை திடுக்கிட்டு ஓடும்படி செய்யவேண்டும். ராயல்கமிஷனால் நமக்காவதொன்றுமில்லை. எல்லாம் மூடுமந்திர வேலையாயே தெரிகிறது. இந்தியரை இனிப்புக்காட்டி யேமாற்றியகாலம் மலையேறிவிட்டதெனு முண்மையை ராயல் கமிஷன் பகிஷ்கரிக்கப்படுவதினின்றும் உலகம் அறியும்.

---

## தமாஷ்பேச்சு.

தூங்கா! தலைக்கீழ் தடியேன் வைத்துப் படுத்திருக்கிறாய்?

தூங்—கொசுக்கடிக்க வந்தா லடிப்பதற்கு.

---

முத்து! என்ன என்னை மாடுமேய்க்கி யென்று கூப்பிடுகிறாய்?

மு—உன் பெயர் என்ன?

பதில்—கிருஷ்ணன்

மு—அதனால் தான் அப்படிக்கூப்பிட்டேன்.

---

கேள்வி—எந்த ஊர்? என்ன பெயர்?

பதி—அன்னலூர்; ஆஸ்தியப்பன்.

கே—என்ன ஜோலியாய் வந்தீர்?

பதி—வயிற்றிற்கில்லையாகையால் யாசகத்திற்கு வந்தேன்.

---

வேலன்—விகடா! ஈக்கடி பொறுக்க முடியவில்லையே.

விக—தேகமெல்லாம் சீனியைப் பூசிக்கொண்டால் ஈக்கள் நெருங்காது.

---

பெரியவரே! இனி உங்களுக்குள்ள ஒவ்வொரு கவலையையும் உங்கள் மகன் தீர்த்துவிடுவான்.

பெரி—ஆமாம். இப்போது பல்லத்தனையும் உதிர்த்து பல்வலி வருமென்ற கவலையை நீக்கியிருக்கிறான்.

---

ராமா! இந்நேரம் தூங்குகிறாயே, ராத்திரி சீட்டு விளையாட்டோ?

ரா—இல்லை இல்லை...ஸ்பேடு பெரிதில் போகிறது.

---

அழகப்பா! உன்மனைவி உன் அடி பொறுக்கமாட்டாமல் கிணற்றில் விழுந்திறந்துபோனாளே!

அழ—அவள் இறந்துமாத்திரம் போயிருக்கட்டும்; இன்னும் எத்தனை அடி வாங்குவாளென்று பார்!

---

உபாத்தியாயர்—பையா! ஐந்தையும் ஐந்தையும் கூட்டினால் எவ்வளவு?

பை—பத்து

உபா—பெருக்கினால் எவ்வளவு?

பை—பத்துதான்

உபா—எப்படியடா பத்தாகும்?

பை—கூட்டு என்றாலும் பெருக்கு என்றாலும் ஒன்று தானே ஐயா!

உபா—அடா விளக்கு மாற்று ஞானமே!

---

வேடிக்கை விரும்பி—பையா! உங்கள் வீட்டில் ஏனப்பா முந்தி தீ வைத்துவிட்டாய்?

பை—அப்போது சிறுபையனாயிருந்ததால் வைத்துவிட்டேன்.

வே—இப்போது உன்தம்பி சிறு பையனாயிருக்கிறான்; அவனை வைக்கச் சொல்லப்பா.

---

## பிராமணீயம் ஒழிந்த திருமணம்.

1-10-27ல் கும்பகோணத்தில் கூடிய 11-வது நாடார் மகா நாட்டில் நிறைவேற்றப் பெற்ற சுயமரியாதைத் தீர்மானத்திற் கிணங்க மதுரை, கோரிப்பாளையம் மகா-௱-௱-ஸ்ரீ மா. வேல் நாடார் அவர்கள் சிரேஷ்ட குமாரத்திக்கு 4-11-27ல் நடைபெற்ற திருமணத்தின் போது திருமணச் சடங்குகள் பிராமண ரல்லாதாரைக் கொண்டே நடைபெற்றது.

இதேபோல் நம்மவர் இல்லங்கள் தோறும் நடக்கும் சடங்குகளனைத்தையும் பிராமணீயத்தை நீக்கியே நடத்த வேணுமாய் சுயமரியாதையை வேண்டி வேண்டிக் கொள்கிறேன் என்று மதுரை, "சமத்துவ ஊழியச்சங்க"ப் பொக்கிஷதார் ஸ்ரீமான் அ. வே, முருகையாநாடார் அவர்கள் எழுதுகிறார்கள்.

குறிப்பு:—இச் சுபகாரியத்தை முன்னிட்டு நம்மித்திரனுக்கு நன்கொடையாக ரூபாய் 1-0-0 அனுப்பியிருக்கிறார் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். (ப-ர்)

---

பிணித்துக் கீழ்க்கொண்ட
பிராமணச்சூழ்ச்சியை
துணித்து மேற்கொள்ள
சுயமரியாதையே.

## இலங்கை.

### மகாத்மா காந்தி விஜயம். நாடார்களின் வரவேற்பு.

(ஒரு நிருபரிடமிருந்து.)

மகாத்மா காந்தியடிகளை அவரது ஜாகையில் நாடார்குலப் பிரதிநிதிகள் 16-11-27ல் இரவு 8-30 மணிசுமாருக்கு சந்தித்து நேர்த்தியாய் சித்திரம் செதுக்கி கண்ணாடி போட்ட ஓர் உபசாரப் பத்திரமும்பணமுடிப்பும் சமர்ப்பித்தார்கள். உபசாரப் பத்திரத்தில் 13 லக்ஷம் ஜனத்தொகையரான நாடார்களின் மஹாஜன சங்க கான்பரன்ஸ் சமீபத்தில் கும்பகோணத்தில் கூடியபோது நிறைவேற்றிய தீர்மானத்தின்படி நாடார் மஹாஜனங்கள் கதரியக்கத்தில் தீவிர சிரத்தை காண்பித்து வருவதாகவும், மகாத்மாவின் வருகையின் பலனால் இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கும் இலங்கை வாசிகளுக்கும் நிலையான சகோதர வாஞ்சையுண்டாக விரும்புவதாகவும், பூலோக மெங்கும் ஜீவகாருண்ய அஹிம்ஸா தர்மத்தை உபதேசித்தருளிய புத்தபரமாத்மாவின் அடிச்சுவடுகளைப்பின்பற்றி வருகிற இலங்கையிலுங்கூட சில விடங்களில் "பசுவதை" என்ற கொடிய பழக்கமிருந்துவருவது மஹாத்மாவின் அஹிம்தா தர்ம உபதேசத்தால் நீங்கிவிடுமென எதிர்பார்ப்பதாகவும், நாடெங்கும் கதரியக்கம் பரவி அவ்வியக்கத்தை நிர்வகிக்கக்கூடிய தகுந்த ஸ்தாபனங்களும் ஆங்காங்கு ஏற்பட்டிருப்பதால் இனி தோழர் சக்லத்வாலா, மௌலானா ஷவுக்கத் அலி போன்ற தேசாபிமான வீரர்களின் ராஜீய இயக்கத்திற்கு மகாத்மாவின் அரிய ஆதரவு பூரணமாய்" கிடைக்க வேண்டுமென்று கோரியும் குறிப்பிடப் பட்டிருந்தது. மகாத்மா அகமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு, உபசாரப்பத்திரம் பங்களாவில் வைக்கக்கூடிய பெரியதாயிருப்பதால் அதை ஏலமிட்டார்கள். ஸ்ரீமான் கெ. கலியாணசுந்தர நாடாரவர்கள் ஏலத்தில் ரூபாய் 55 செலுத்தி ஷை பத்திரத்தை வாங்கினார்கள். நாடார் பணமுடிப்பு முயற்சிக்கு முக்கிய காரணஸ்தரான கொழும்பு, பி. டப்பிள்யூ ஹெட் ஆபீஸ் ஸ்ரீமான் பே. வெ. ஷண்முகநாடாரவர்கள் (நாலுமாவடி) தனது கை மோதிரத்தையும் தனது 4-வது குமாரன் மாஸ்டர் ராம்தாஸ் என்ற சிறுவனுடைய மோதிரத்தையும் மகாத்மாவிடம் பரிசளித்தார்கள். மகாத்மா அகமகிழ்ந்து சிறுவனை ராம்தாஸுக்கு அழகியபூமாலையைச் சூட்டினார்கள். ஷை மோதிரங்களை ஸ்ரீமான் டி. ஜி. மணி நாடாரவர்கள் ரூபாய் 25-0-0க்கு ஏலத்திலெடுத்தார்கள்.

குறிப்பு:—ஏற்கனவே 15-11-27ல் விவேகானந்த சபாவில் வைத்து கொடுப்பதாயிருந்த ஷை வரவேற்பு, புரோகிராம் மாறுதலினால் 16௳ ஜாகையில் வைத்துக் கொடுக்க நேர்ந்தது.

---

## மதிப்புரை.

### இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

இப் பெயருள்ள ஒரு புஸ்தகம் மதராஸ் வாசன் கம்பெனி யாரிடமிருந்து வரப்பெற்றோம். இதில் நாணம், சுகமுள்ள விடத்தில் துக்கம், பெண்களுக்குரிய விஷயங்கள், சாந்தி முகூர்த்தத்தில் வெற்றி, தம்பதிகளும் சமூகமும், கர்ப்பத்துக்கு முன், மனம்போல் மக்களைப் பெறும்வழி, கருத்தரித்தலும் மலட்டுத்தனமும், கருத்தரித்தலைக் குறைத்தல், வயதடைந்தபின்னர்எனும் பதினெறு அத்தியாயங்களிலிருக்கின்றன ஒவ்வொரு அத்தியாயத்திலும் அனேக ரகசியங்கள் வெளியிடப்பெற்றிருக்கின்றன, தலைப்பின் பெயருக்குரிய லட்சணங்களின் பலாபலன்களை ஆசிரியர் மிகுந்த சிரமத்துடன் பல நூல்களையும் பல தேச சரித்திரங்களையும் ஆராய்ச்சிசெய்து வெளியிட்டிருக்கிறார். ஆண் பெண் இருபாலருக்கும் வாசிக்கத்தக்க நூல். ஒவ்வொரு குடும்பத்திலும் பொக்கிஷம் போல் வைத்திருக்கவேண்டிய நூல். 366 பக்கமுள்ளது. விலை ரூபாய் 2.

விலாசம்:—

வாஸன் புத்தகசாலை
97. அண்ணாபிள்ளை தெரு,
ஜி. டி., மதராஸ்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection





சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாக்கா வெளியை மனத விழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ கார்த்திகை ௴ ௧௨ ௳

---

## ஒற்றுமைக்கு

### திரு. அய்யங்கார் முயற்சி.

நமது இந்திய காங்கிரஸ் மகா சபைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் காங்கிரஸ்த் தலைவராக வந்த ஒரு வருஷ காலத்தில் ஒரு தினத்தையாவது விருதாவாய்க் கழித்தது கிடையாது. அவர் வேலையின் சுறுசுறுப்பை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் அவருடைய வேலையின் பலனாக தேச மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்னென்ன வென்பதை எளிதில் கண்டு பிடிக்க முடியாது. பூதக் கண்ணாடி வைத்துத்தான் பார்க்க வேண்டும். திருவாளர். ஸி. ராஜகோபாலாச்சாரியாரைப் போல் தாமும் ஒரு குட்டி மகாத்மா வாகி விடலாமென்று இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பெரும் பிரயாசைப் பட்டார். செய்து விட்டதாகவும் வாய்ப் பறை யறைந்தார். அப்போது இந்து முஸ்லீம்கள் ஒருவருக் கொருவர் கழுத்தில் கத்தியை வைத்துக் கொள்வதில் வெகு வேகம் காட்டினார்கள். சுவாமி சிரத்தானந்தரும் தீர்ந்தார். பின்னர் மகாத்மா நந்தி கிராமத்துக்கு வந்த வுடன் அவரையும் அழையாமல் கல்கத்தாவில் காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டினார். உதவைக் குதவாத தீர்மானங்களைச் செய்தார். அதை டில்லியில் விளம்பரஞ் செய்துவிட்டு சென்னை வந்து சேர்ந்தது தான் தாமதம்! டில்லியில் சுவாமி சிரத்தானந்தரைக் கொலை செய்த அப்துல் ரஷீத்தைத் தூக்கிலிட்ட வன்று சொல்லொணாக் கொள்ளையும், கொலையும் நடந்து விட்டன. ஐயங்கார் ராசியைப்பற்றி பத்திரிகைகளும் பாராட்டிவிட்டன.

இப்போது சென்னை மாகாணத்தில் பிராமணர் பிராமணரல்லாதார் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதை மற்றொரு பக்தியில் பிரசுரித்திருக்கிறோம். வட மாகாணத்தில் இந்து முஸ்லீம்களை ஒற்றுமைப் படுத்த மகாத்மா அலி சகோதரர்களிருவரையும் தம் கைக்குள் போட்டுக் கொண்டு 21 நாள் பட்டினியிருந்து பார்த்தும் முடியாத விஷயத்தில் நமது ஐயங்கார் தலையிட்டார். தென் மாகாணத்திலும் மகாத்மா சுற்றிப் பார்த்துத் தீர்த்துவைக்க முடியாத பிராமணர் பிராமணரல்லாத வேற்றுமையை நமது ஐயங்கார் தீர்த்து விடுவாரென்பது சந்தேகந்தான். இவர் அறிக்கையே அப்படித்தானிருக்கிறது. அதில் ஒன்றை மட்டுங் குறிப்பிடுகிறோம். 11-ல் பொது ரஸ்தாக்களில் எல்லா ஜாதியாருக்கும் சமத்துவமான உரிமையுண்டு. அதே மாதிரி நீதிஸ்தலங்கள், பொது ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் குறிப்பிட்ட தடையுத்தரவு ஒன்று மில்லாதவரையில் யாரும் பிரவேசிக்கலாம். பொது ரஸ்தாக்களில் செல்ல எல்லோருக்கும் உரிமை யுண்டாம்; அதே போல் நீதிஸ்தலம், பொது ஸ்தாபனங்களில் தடை யுத்தர வில்லாவிடில் பிரவேசிக்கலாமாம். ஆகா! என்ன மூளை!! என்ன ஆச்சரியம்!!! சத்திரத்தில் சாப்பிடவும் அப்பணையங்கார் உத்தரவு வேண்டுமென்பது போலிருக்கிறது ஐயங்கார் யோசனையும். உரிமையுள்ள இடத்திற்குச் செல்ல என்ன தடை? என்று கேட்கிறோம்.

ஒரு பொதுக் கிணற்றில் ஒரு தமிழனை ஒரு பிராமணன் தண்ணீர் எடுக்கக் கூடாதென்று தடுக்கிறான்; ஒரு பிராமண அதிகாரி அதை ஸ்திரப்படுத்தி தமிழனுக்கு 144 தடை யுத்தரவு போடுகிறான்; அதில் பின்னர் தமிழனுக்கு உரிமை யுண்டா? இல்லையா? அதில் தமிழன் பிரவேசிக்கலாமா? கூடாதா? தீர்த்து வைக்க வேண்டியவை, தொடாதே; பாராதே; வாராதே; இராதே; நுழையாதே என்கின்ற பிரச்சினைகளே யன்றி வேறு நிலத் தாவாக்களாவது, பணத் தாவாக்களாவது இல்லை. இவைகளைத் தீர்த்து வைக்கச் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டியது மில்லை. பிராமணரல்லாதவர்களைக் கலந்தாலோசிக்க வேண்டியது மில்லை. ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார், சாஸ்திரியார் ஆகியவர்களைக் கூட்டி வைத்து ஜாதி வித்தியாசங்களில்லை; எல்லாம் சமம்; உலகம் கடவுளுக்கே சொந்தம்; அது எல்லோருக்கும் பொது என்று தீர்மானித்து வருணாச்சிர தர்மக் கட்டை அவிழ்த்து விட்டாலே போதுமான தென்பதை திரு. ஐயங்கார் அறிய வேண்டும்.

நமது திரு. ஐயங்கார் வெகு நாள் சர்க்கார் தாசரா யிருந்திருந்த தனவந்தராயுமிருக்கிறார். ஒருக்கால் ஆசார சீர்திருத்தங்களிற் புகுந்து சம தர்ம வாதியென்றும் பெயர் பெற்றார். தேசாபிமானியாக வந்து 33 கோடி ஜனங்களுக்கும் பொறுப்பான தலைமையும் வகித்துள்ளார். இவற்றைப் பார்க்கிலும் மேலான பதவி என்ன விருக்கிறது? அந்நிலையங்களில் வேறொன்று மில்லை. ஏழை-பங்காளன் என அதி மேலான பதவி அடைய வேணுமானால்—இவர் உண்மையில் ஒற்றுமையை விரும்புவதா யிருந்தால் உடனே சட்டசபை ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்தும், வக்கீல் தொழிலை விட்டும் நாட்டில் ஏழை மக்கள் ஜீவியத்திற்கு என்ன செய்யலாமென்பதை அறியட்டும். எளிய வாழ்க்கையின் மேலான தத்வத்தை எல்லோருக்கும் போதிக்கட்டும். தமிழ் நாட்டில் சம தருமம் நிலைக்கப் பிறந்திருக்கும் சுயமரியாதைச் செல்வனுக்கு இவர் திரிகாண சுத்தியுடன் பூரண உதவி செய்யட்டும். அப்போது நமது திரு. ஐயங்காரை ஏழை பங்காளனென்று எல்லோரும் போற்றுவர் என்றே நம்புகிறோம்.

---

## குறிப்புகள்.

### திரு-மூர்த்தி பொய்.

பொய் பஞ்சமா பாதகங்களிலொன்றென்று எல்லாப் பண்டைய சாஸ்திரங்களும் பகர்கின்றன. மரியாதையும் மானமு முள்ள எந்த இந்தியனேனும் மற்றெவரேனும் பொய் சொல்லுவதற்கு மிகவும் அஞ்சுவார்கள். பொய் பேசுகிறவர்களிடம் சேரவும் நாணுவார்கள். அரிச்சந்திரனெனும் க்ஷத்திரிய அரசனை பொய் பேச வைக்க வேணுமென்று பிரம்மரிஷி வச்சிரகுடாரம் விஸ்வாமித்திரன் தன்னாலான முயற்சிகளெல்லாம் செய்தான். அவனிடம் கைக்கூலி வாங்கிய நட்சத்திர ஐயனும் செய்யாத கொடுமைகளெல்லாம் செய்துபார்த்தான். முடிவில் அரிச்சந்திரனே வெற்றி பெற்றானென்பது நம் நாட்டுச் சிறு குழந்தைகளுக்கெல்லாம் தெரியவரும்.

தற்காலத்திலோ பொய் வெகு மலிவாய் விட்டதென்று தெரிகிறது. அதிலும் சில கற்றவர்களிடம் கலப்பில்லாத பொய் காணப்படுகிறது. திரு. சத்தியமூர்த்தி ஐயர் எத்தனையோ தடவை தாம் சொன்னதைச் சொல்லவில்லை யென்று சாதித்தார். தாம் சொன்னது பொய் யென்பதை ரூபிக்கிறேமென்று மடியிற் கை போட்டது போல் திரு. மூர்த்தி சொன்னதை வெட்ட வெளிச்சமாய்ப் பொய்யென்று "ஜஸ்டி"ஸும் "தமிழ்நாடு"ம் ரூபித்து விட்டன. இப்போதும்சென்னைக் கார்ப்பொரேஷன் தலைவர் தேர்தலிலும் அவர் வகுப்புத் துவேஷமாகச் செய்த சூட்சி வெளிவந்து விட்டது. இதற்கினி யென் சொல்வாரோ தெரியவில்லை. இவ்வாறு பட்டப் பகலில் பசுவை எருமை யென்பதுபோல், கற்றவர் கூறுங்கலப்பிலாப் பொய்க்கு திரு. மூர்த்தி பொய்யென்ற பின்னெழுதும் அகராதி களில்ச் சேர்த்துக் கொள்ளவுங்கூடும்.

### விடாமுயற்சி வெற்றிதரும்.

பாலக் காட்டைச் சேர்ந்த கல்பாத்திப் பிராமண அக்கிரகாரத்தெருக்களில் ஈழுவர், தீயர், புலையர் முதலிய சில வகுப்பினரைப் பிரவேசிக்க விடாமற் றடுத்துக் கொடுமை செய்து வந்தார்கள். அக்கொடுமையிலிருந்து விடுபடுவதற்கு அவ்வகுப்பினர் உணர்ச்சியுடன் மிகுந்த கிளர்ச்சிசெய்து வந்தார்கள். சுவாமி சிரத்தானந்தர் முதலிய மேதாவிகள் புத்தி சொல்லியும் கல்பாத்திப் பிராமணர்கள் மனம் கல்லாகவே இருந்தது. ஆயினும் அவர்கள் முயற்சியை விடாமல்க் கிளர்ச்சி செய்து வந்தார்கள். பிற மதம் புகுந்தார்கள்; அடியும் பட்டார்கள். முடிவில் அடித்ததோர் பிராமணனைத் தண்டித்து ஐக்கோர்ட்டு மூலம் தெருக்களில்ப் பிரவேசிக்க அனுமதியும் பெற்றார்கள். அதன் பயனாக கல்பாத்தி ஐயர்கள் ஸர். வி. பி. ஆர். ஐயர் சட்ட மெம்பராயிருக்கிறார் என்று ஆர்ப் பாட்டஞ் செய்த அகந்தைகளெல்லாம் அடங்கி, இவ்வருட உற்சவத்தில் எல்லோரும் பிரவேசிப்பதைத் தடைசெய்யாமல் நிறுத்திவிட்டார்களாம். இவ்வளவு காலஞ் சென்றாவது அவர்கள் கால் மனம் கரைந்து பாதைகளைத் திறந்துவிட்டதற்காகக் கடவுளுக்கு வணக்கஞ்செலுத்துகின்றோம். இதனால் விடாமுயற்சி முடிவில் வெற்றி தருமென்ற படிப்பினை ஏற்படுகின்றது.

### பஞ்சமர்களுக்கு அனுமதி. சாஸ்திரியார் தடை.

சென்னை பச்சையப்பன் கலாசாலையில் பஞ்சமர்களைச் சேர்க்கக் கூடாதென்று எழுந்த பிரச்சினை ஐக்கோர்ட்டு வரையும் போய் ஜட்ஜி சொன்ன புத்திமதிக்கேற்ப அதன் தர்ம கர்த்தாக்கள் கூடிய கூட்டத்தில் பஞ்சமர்களும் இந்துக்கள் தானென்றும், ஆகையால் அவர்களைத் தாராளமாகக் கலாசாலையிற் சேர்த்துக் கொள்ளலாமென்றும் தீர்மானித்திருக்கின்றனர். இத்தீர்மானத்தை ஐந்து பிராமணரல்லாத கனவான்களும் ஆமோதித்திருக்கிறார்கள். திரு. வி. வெங்கடேஸ்வர சாஸ்திரி யென்ற பிராமணர் ஒருவர்மட்டும் தடைசெய்திருக்கிறார். மூர்க்கனும் முதலையும் கொண்டது விடுவதில்லை யென்பதற்கேற்ப காலப்போக்கு எவ்வளவு வேகமாக மாறினாலுங் கூட பிராமணர்கள் தங்கள் விஷமப் பிடிவாதத்தைவிட மாட்டார்களென்று தெரிவதால் பிராமணரல்லாதவர்கள் ஒற்றுமை, தியாகம், விடாமுயற்சியாகிய கிளர்ச்சியினால் தான் அவர்களைத் திருத்தவேண்டும்.

---

## பிராமண பிராமணரல்லாதார் பிரச்சினை.

### சமரச யோசனைகள்.

(அகில இந்திய காங்கிரஸ் மகா சபை பிரஸிடெண்டு ஸ்ரீமான் ஸ்ரீநிவாச ஐயங்கார் பின்வருமாறு பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார்.)

சென்னை மாகாணத்தில் ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த பல ஜாதிகளுக்குள் இருந்துவரும் சச்சரவுகளையும், மனஸ்தாபங்களையும் தீர்த்துவைக்க முயலவேண்டியது அவசியமாயிருக்கிறது. எல்லாக் கட்சியாருக்கும், மாறுபட்ட அபிப்பிராயமுள்ள எல்லாருக்கும் நீதிவழங்கத்தக்க முடிவு ஒன்றுஏற்படுத்திஇதைத் தீர்க்கவேண்டும். இந்த எண்ணத்துடன் நான் கீழ்க்கண்ட யோசனைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இவைகளை ஆதாரமாகக்கொண்டு வாதிக்கலாம் என்று நான் கருதுகிறேன். எனது சொந்த ஹோதாவிலேயே நான் இங்ஙனம் யோசனை கூற முன் வந்திருக்கிறேன். எல்லா சமூகங்களின் பிரதிநிதிகளையும் நான் நேரில் பார்த்து ஏதாவது நிரந்தரமான சமரசத் திட்டம் அமைக்க முடியாதா என்று கலந்து பேச உத்தேசித்திருக்கிறேன். இதன்பின் ஒரு ஒற்றுமை மகாநாடு கூட்டி, அதில் முடிவான யோசனைகளை நிறைவேற்றி எல்லோருடைய சம்மதத்தையும் பெற்ற அறிக்கை யொன்றை வெளியிடலாமென்று கருதுகிறேன். பொது ஜன வாழ்க்கையிலும், அரசியலிலும்மதசம்பந்தம் இருக்கக் கூடாதென்பது எனது கொள்கை. பூரண சுயேச்சையும், சமத்துவமும், நீதியும் எல்லா ஜாதியாருக்கும் வழங்கினால்தான் தேசியம் வளர்ந்து, ஜனநாயகம் முதிர்ந்து சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கமுடியும்.

### உயர்வு தாழ்வு கிடையாது.

1. சுயராஜ்யம் பெற்று இந்தியா முன்னேற்றமடைய வேண்டுமெனில், சகல ஜாதிகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட்டு ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து அமைதியுடன் வேலைசெய்ய வேண்டியிருத்தலால் ஒரு ஜாதியாரும் பிறப்பினால் உயர்வென்றோ, தாழ்வென்றோ கருதக்கூடாது. எனவே, எல்லா ஜாதியாரும் உயர்வு தாழ்வின்றி சமத்துவமாகக் கருதப்படவேண்டும். அரசாங்க விஷயங்கள் ஒன்றிலும் ஜாதிப் பாகுபாடே ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

2. ஜாதி வித்தியாசங்களைக்கொண்டு ராஜாங்க உத்தியோகங்களிலும், கௌரவங்களிலும் எத்தகைய தடையும் இருக்கக்கூடாது. எந்த ஜாதியாரும் எந்தத் தொழிலும், வியாபாரமும் செய்யலாம்.

3. அரசாங்க இலாகாக்கள் எதிலும் எந்த ஜாதியாரும் மிதமிஞ்சி யிருக்கக் கூடாது. அத்தகைய சுதந்திரம் ஒரு வகுப்பினருக்கும் இருக்கக்கூடாது. எல்லா ஜாதியாருக்கும் சம உரிமைகளும், சமத்துவமான அந்தஸ்தும் உத்தியோக சாலைகளில் வழங்கப்படும். எந்த ஜாதியாரும் அந்தப்பதவிகளுக்கு வரத் தாராளமாய் வழியிருக்கும். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



லட்சியஞ் செய்யாமல், ஜாதிகளின் ஜனத்தொகையை கணக்கிட்டு பங்கு போட்டுக்கொண்டிராமல், நியாயமாயும் ஒழுங்காயும் எல்லோருக்கும் உத்தியோக ஸ்தானங்கள் அளிக்கப்படவேண்டும்.

4. எதாவது ஒரு ஜாதிக்கு நியாயம் வழங்கப்படவில்லையென்று புகார் ஏற்படில், உடனே அதைப்பற்றி எல்லா ஜாதிப்பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு சமரசப்பஞ்சாயத்து அமைத்து நியாயம் வழங்கவேண்டும்.

### "சூத்திரன்" என்ற பெயர் தொலையவேண்டும்.

5. ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் குலத்தின் பெயரை நிர்ணயஞ் செய்து கொள்ளலாம். ராஜாங்கத்தார் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதெல்லாம் அந்தப் பெயரையே உபயோகிக்க வேண்டும். விசேஷமாய், பிராமணர்கள் இதர ஜாதியாரைப்பற்றிப் பிரஸ்தாபிக்கையில் 'சூத்திரன்' என்ற பெயரை உபயோகித்தல் கூடாது. ராஜாங்க நடவடிக்கைகளிலும், தஸ்தாவேஜிகளிலும் பத்திரிகைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் "சூத்திரன்" என்ற பெயரையே பிரயோகிக்கக் கூடாது.

### ஜாதிகளுக்குள் மரியாதை.

6. பிராமணராகிலும் சரி, வேறெந்த ஜாதியாரும் சரி இதர ஜாதியாரை விட எந்த வகையிலும் உயர்வு கொண்டாடக் கூடாது. ஜாதி உயர்வைக்கொண்டு தமக்கு முதல் "தாம்பூலம்" வழங்க வேண்டுமென்றாவது, முதல் ஸ்தானம் அளிக்கவேண்டுமென்றாவது, வேறெந்தவித மரியாதையாவது கொண்டாட எவருக்கும் உரிமை கிடையாது. பிராமணரோ, வேறு ஜாதியைச் சேர்ந்தவரோ, மற்ற ஜாதியைச் சேர்ந்த எவரும் தங்களை இன்னபடி வணங்கவேண்டும்; இன்னபடி தங்கள் முன் உடையணிந்து நிற்கவேண்டும்; தங்களைக் கண்டால் இவ்வளவு தூரம் ரோட்டுகளில் ஒதுங்கிப் போகவேண்டுமென்றாவது வற்புறுத்தக்கூடாது. எந்தப் பிராமணரும் பிற ஜாதியாரைப்பற்றிப் பேசுகையில் ஏக வசனத்தில் பேசக் கூடாது. சிநேகிதத்தாலோ, நெருங்கிய பழக்கத்தினாலோ, அல்லது தங்கள் கீழ் ஊழியஞ் செய்வதாலோ சொல்லலாம். மற்றப்படி ஒரு ஜாதியாரைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பத்திலெல்லாம் அவதூறாகவோ, அல்லது அவமரியாதையாகவோ, இழிவாகவோ பதங்களைப் பிரயோகிக்கக் கூடாது. எப்பொழுதும் மரியாதையாகவே பேசவேண்டும். பிற ஜாதிகளுக்கு இழிவான, அவமதிப்பான பேர்களையும் கற்பிக்கக் கூடாது.

### சமபந்தி போஜனம்.

7. எந்த ஜாதியாருக்கும் பிற ஜாதியாருடன் சம பந்தியில் உட்கார்ந்து சாப்பிடவோ, சாப்பிட மறுக்கவோ உரிமையிருக்கிறதை ஒப்புக்கொள்ளுகையில், பிற ஜாதியாருடன் உட்கார்ந்து சாப்பிடுவதைக் கண்டித்து எத்தகைய பிரசாரமும் செய்யக்கூடாது. அதேமாதிரி பிற ஜாதியாரால் தயாரித்த உணவை அருந்தவும், அருந்தாமலிருக்கவும் அவர்களுக்கு உரிமையுண்டு. அப்படி உயர்ந்த ஜாதியார், தாழ்ந்த ஜாதியார் வீட்டில் சாப்பிட்டு விட்டதாகவும் கண்டனஞ் செய்யக்கூடாது. இத்தகைய பிரசாரங்கள் ஒரு ஜாதியாரை அவதூறு செய்வதாகும் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும்.

### கலப்பு விவாஹமும் ஹிந்து சட்டங்களும்.

8. கலப்பு விவாகம் செய்துகொள்ளுவது அவரவர்களுடைய சொந்த அபிப்பிராயத்தைப் பொறுத்திருக்கிறது. ஒவ்வொரு மனிதருக்கும் தனியாக இதற்கு உரிமையுண்டு. தாழ்ந்த வகுப்பினரை விவாகம் செய்துகொண்டு விட்டதாக எத்தகைய கலப்பு விவாகத்தைக் குறித்தும் கண்டனப் பிரசாரஞ் செய்யக் கூடாது. அங்ஙனம் செய்தல் அவதூறு என்று கருதப்படும்.

9. ஹிந்துச் சட்டப்படி துவிஜர்களின் வைப்பாட்டி பிள்ளைகளுக்கு உள்ள சொத்துரிமை மற்ற ஜாதியினருக்குள் அம்மாதிரி பிறக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கவேண்டும்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### நாடார் மஹாஜனங்களுக்கு அறிவிப்பு.

நமது சங்கத்திற்கு முன்னர் அரிய ஊழியம் புரிந்து வந்த மகா-ள-ள-ஸ்ரீ கே. எஸ். அருணகிரிநாடார் அவர்கள் 24-11-27 முதல் சங்கத்தில் கௌரவ ட்ராவலிங் ஏஜண்டாக நியமிக்கப் பெற்றுள்ளார்.

அவர் முதலில் திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம் தாலுகாவில் சங்கத்தின் நோக்கங்களைப் பரவச் செய்வதற்காகச்சுற்றுப்பிரயாணம் செய்வார். ஆங்காங்குள்ள அபிமானிகள் சங்கத்தின் நோக்கம் நிறைவேறுவதற்குரிய வழிகளில் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பா. ம. பாண்டிய நாடார்,
ப. வ. சோமசுந்தரநாடார்,
காரியதரிசிகள்.

### அகால மரணம்.

கோயமுத்தூர் மைக்கல்ஸ் ஹைஸ்கூல் டிராயிங் மாஸ்டர் மிஸ்டர் யன். டேனியெல் நாடார் குமாரத்தி கிரேஸ் என்னும் பெண்மணி தனது 19-வதுவயதில் பி. ஏ.பரீக்ஷைகொடுத்து யல். டி. படிக்கையில் வியாதியின் நிமித்தம்இயமன் உயிர் கொடுபோனான். என்னே இக்கூற்றுவனின் கூத்து! பெற்றோருக்கும் சுற்றத்தாருக்கும் கடவுள் ஆறுதலளிப்பாராக என்று ஸ்ரீமான் அப்புசாமிநாடார் எழுதுகிறார்.

10. ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் விஷயத்திலும் அதேமாதிரி எல்லா ஜாதியாருக்கும் இந்து சட்டத்தில் சம உரிமை இருக்கவேண்டும்.

11. பொது ரஸ்தாக்களில் செல்ல எல்லா ஜாதியாருக்கும் சமத்துவமான உரிமை உண்டு. அதே மாதிரி நீதிஸ்தலங்கள், பொது ஸ்தாபனங்கள், எல்லாவற்றிலும் குறிப்பிட்ட தடையுத்தரவு ஒன்றுமில்லாத வரையில் யாரும் பிரவேசிக்கலாம்.

### மனச்சாட்சியும் மதாசாரமும்.

1. அவரவர் மதாசாரத்தை தங்கள் மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் அனுசரிக்க உரிமையுண்டு. ஆனால் மேற்குறிப்பிட்டவாறு பிற ஜாதிகளுடைய சுதந்திரங்களை எவ்வகையிலும் அது பாதிக்கக்கூடாது.

2. எந்த ஜாதியாரும், தங்கள் மதாசாரத்தையும், கொள்கையையும், பிற ஜாதியைச் சேர்ந்த எவரையும் ஏற்கும்படி வற்புறுத்தக்கூடாது.

3. பள்ளிகளில் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் விஷயத்திலும், பொருளுதவி செய்வதிலும் மத விஷயங்களைக் கொண்டுபோய் புகுத்தக்கூடாது. இது விஷயமாய் வித்தியாசங்கள் பாராட்டவும் கூடாது. மத சம்பந்தமான காரியங்களுக்காக நிறுவியுள்ள நிதிகளை ரஸ்தாக்கள் அபிவிருத்தி, தெருக்களில் விளக்குப் போடல், தண்ணீர் வசதிகளை யதிகரித்தல், சாக்கடை கட்டி விடுதல் போன்ற பொது ஜன சமூக நன்மைக்கான வேலைகளில் தகுந்த ஈடுசெய்து விட்டு உபயோகித்துக் கொள்ளலாம். வேறெந்தக் காரியங்களுக்கும் அந்த சொத்தை வினியோகஞ் செய்யக் கூடாது.

மத சம்பந்தமான விஷயங்களைப் பற்றி நான் தீர முழுதும் என் கருத்துக்களை வெளியிடவில்லை. அவைகளை எல்லா சமூகப்பிரதிநிதிகளுடனும் தனிமையாகக் கலந்து பேசிய பின்னர்தான் முடிவு செய்துகொள்ளக்கூடும்.

சீர் திருத்தக்காரரின் சிந்தை யெங்ஙமெனின்
பார் பொறுத்த மட்டும் பண்புடைத்தாதலே,

### வாசக சாலையின் பயன்.

சகோதரர்களே!

தற்காலத்தில் நம்மிந்திய மக்கள் க்ஷேம மடைவதற்குச் சாதனங்கள் முக்கியமாகக் கல்வி அபிவிருத்தியே யென்பது யாவரு மறிந்ததே. ஆனால் அக்கல்விகற்று அதன்படி நடக்கப்பழகுவதே மேலானதாகும். இதற்கு அன்னியநாட்டு வர்த்தமானங்களையும், பற்பல புதிய விஷயங்களையும் திரட்டிக் கொண்டு வரும் பத்திரிகைகளையும் நீதி முறைகளடங்கிய புஸ்தகங்களையும் நிம்மதியோடிருந்து வாசிப்பதற்கு வாசகசாலை அத்தியாவசியமாகும். இவ்விதமான நன்னோக்கங்களைத் தரும் வாசகசாலையை மானிடராகப் பிறந்தார் அனைவரும் ஆதரிக்கவேண்டுமென்பது விளங்கும்.

சீர்கேடான நிலைமையிலிருந்து ஜப்பான் தேசம் தற்பொழுது வாசகசாலைகளினாலும் சங்கங்களினாலும்மேன்மை பெற்றுவருகிறதை நாம் நன்குணரவேண்டும்.

நம்மிந்திய தேசத்தையும் மேன்மையடையச் செய்ய வாலிபவீரர்கள் விழித்து வாசகசாலைகளையும் சங்கங்களையுமுண்டாக்கியும், முன்பு தோன்றியுள்ள வாசகசாலை சங்கங்களை மென்மேலும் ஆதரித்து அவைகளுக்கு அனைவரையும் அங்கத்தினர்களாகச் சேர்த்து மென்மேலும் ஊக்கங் காட்ட வேண்டுமாறும் வாலிப வீரர்களையும், பெரியோர்களையும் பன்முறையும் வேண்டுகிறேன்.

சிவ. கு. சிவசுப்பிரமணியன்.

### கோச்சடை நாடார்கள்.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன் மதுரை நகரைச் சேர்ந்த கோச்சடை கிராமத்தில் உள்ள சில நம் குல சகோதரர்களின் நன் முயற்சியின் பயனாய், நமது மகாஜன சங்கக் காரியதரிசிகளையும் அவர் சகாக்களையும் அழைத்துச் சென்று "கோச்சடை நாடார் குல பரிபாலன அபிவிருத்தி சங்கம்" என்ற பெயரோடு வெகு உற்சாகமாக ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள். இச் சங்கம் வெகு ஊக்கமாகவும் உற்சாகமாகவும் தனது நிர்வாகத்தை இரண்டுமாத காலமாய் நடத்தி வந்தது. ஆனால் தற்பொழுது சிலர் இச்சங்கத்தை சீர் கெடச் செய்ய எண்ணி வருகிறார்கள். இவ்விதமாகச் சிலர் செய்வதையறிந்து நமது நாடார் உலகம் விசனிக்கவேண்டியதே. நமது குலம் நமது தேசம் என்ற பேரொலி எங்கும் கேட்கப்படும் இது போது நமது நாடார் உலகத்திற்கு சற்றேனும் தங்களால் உதவியில்லாவிட்டாலும்உபத்திரவமில்லாதேனும் இருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். கனவான்களே! நமது சங்கத்தின் நோக்கத்தை அறிய வேண்டுமானால் நம் குலப் பத்திரிகைகளாகிய "நாடார் குல மித்திரன், "நாடார் நண்பன்" முதலியவற்றை வாசித்து உண்மையறியுங்கள். இனியும் இவ்விதமாக சங்கங்களைப்பற்றி வீண் துவேஷங் கொள்ளாது அதில் அங்கத்தினராகச் சேர்ந்துழைக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கு. கருப்பையா நாடார்,

## செய்தித் திரட்டு.

பம்பாயில் மிஸ் மேயோவின் புஸ்தகத்தைக் கண்டித்து பெரிய பொதுக் கூட்டமொன்று கூடிற்று.

* * * *

பச்சையப்பன் கலாசாலையில் தாழ்ந்த வகுப்பினரைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று டிரஸ்டிகளின் கூட்டத்தில் தீர்மானமாயிருக்கிறது.

* * * *

### நெல்லூர்ச் சேதம்.

| | |
|---|---|
| இடிந்துபோன மெத்தை வீடுகள் | 959 |
| முழுவதும் விழுந்த ௸ | 50 |
| ஓட்டு வீடுகள் | 4046 |
| முழுவதும் விழுந்த வீடுகள் | 455 |
| கீத்து வீடுகள் | 1113 |
| முழுவதும் நாசமான கீத்து வீடுகள் குடிசைகள் | 3,147 |
| இறந்துபோனவர்கள் | 86 |
| காயம்பட்டவர்கள் | 98 |
| பிராணிகளிறந்தவை | 434 |
| காயமடைந்த பிராணிகள் | 144 |
| சாமான்கள் பாழானவை | 9645 |
| தான்ய சேதம் | 258 |
| சேதத்தின் மதிப்பு ரூபாய் | 15,12,114 |

இதில் கவர்ன்மெண்டு உடமைகள் சேர்க்கப்படவில்லை.

கும்பகோணம் தாலுகா பார்ப்பனரல்லாதார் மகாநாடு திருப்புவனத்தில் ஸ்ரீமான் ஒ. குமாரசுவாமி பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

* * * *

இரண்டு முஸ்லீம்கள் தலிகானில் இந்து விக்கிரகங்களையுடைக்க முயன்றதற்காக 2-மாதங்கடுங்காவல் விதிக்கப்பட்டனர்.

* * * *

ஸர். டி. சதாசிவ அய்யர் அவர்கள் 24—11—27 மாலை 4 மணிக்கு பரகதியடைந்தார்.

* * * *

மகாத்மா காந்தி நவம்பர் மீ 30உ இலங்கையிலிருந்து இராமநாதபுரத்திற்கு விஜயஞ் செய்வார்.

* * * *

லக்ஷ்மணபுரியில் முனிசிபாலிட்டி கட்டடத்திற்கு இனாமாக 25000 ரூபாய் கொடுப்பவர் பெயரையே அக்கட்டடத்திற்கு வைக்கப்படுமாம்.

* * *

தேவதாசிகள், சட்ட மெம்பர் கனம் ஸர். சி. பி. இராமஸாமி அய்யரை பேட்டி கண்டனர். அவ்வமயம், ஸ்ரீமதி முத்துலெக்ஷ்மி ரெட்டியின் மசோதா சட்டமாகிவிடின் சொத்து பாத்தியதைகளை தாங்கள் இழக்க நேரிடுமென்றும், விபசாரத்திற்கும் பொட்டுக் கட்டிக்கொள்வதற்கும் சம்பந்தமில்லையென்றும்கூறி, தங்களுடையஇனாம்பாத்தியதையும் சொத்து பாத்தியதையும் பறிமுதல் செய்யப்பட்டால் ௸ மசோதா தாசிகளை விபசாரம் செய்யும்படி தூண்டியதற்கொப்பாகுமெனக் கேட்டார்களாம்.

* * *

ஆப்கன் அமீர் அவர்கள் பம்பாய்க்கு டிசம்பர் மீ 6 உ விஜயம் செய்வார். பம்பாயிலுள்ள, இந்து பார்ஸி, கிறிஸ்துவர், முஸ்லீம் முதலிய எல்லா வகுப்பினரும் வரவேற்பார்கள். மிஸஸ் சரோஜனி நாயுடு அவர்களும் இதற்கென வந்திருக்கிறார்கள்.

## மலாய் நாட்டுப் பிரயாணம்.

நமது "நாடார் குல மித்திரன்" ஆசிரியர் திரு. சூ. ஆ. முத்து நாடாரவர்கள் வருகிற பிப்ரவரி மீ முதல் வாரத்தில் தமது சகாவுடன் மலாய் நாட்டுக்குப் பிரயாணம் செய்வதாக உத்தேசித்திருக்கிறார். இலங்கை வழியாகச் செல்வதா, நாகை வழி செல்வதா வென்று இன்னும் தீர்மானிக்க வில்லை. சமீபத்தில் சென்னையில் காங்கிரஸ் கூடும் சமயத்தில் நடைபெறப்போகிற அகில இந்திய ஜீவ ரட்சணை மகாநாட்டுக்குப்போய் வந்த பின் பிரயாணத்தின் காலம், மார்க்கம் முதலியவைகள் திட்டமாய்த் தெரிவிக்கப்படும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## வருணாச்சிரம தருமமும், தென்னாட்டுப் பிராமணர்களும்.

பிராமணர்களின், சுயநலக் கொள்கைகளால் நம் நாடு அடைந்திருக்கும் கேடுகளிலிருந்து விடுபட வேண்டுமென்று பிராமணரல்லாதார் முயற்சி செய்வதைக் கண்டு, பெரிய பதவிகளிலுள்ளவர்கள் முதல் பஞ்சாங்கப் பிராமணர் வரை எதிர்ப் பிரசாரஞ் செய்வதற்கு முன் வந்த தற்காக நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம்.

அவ்வித பிரசாரங்களில் 11-11-27ல் சென்னை பி. எஸ். ஹைஸ்கூலில் ஸர். வி. பி. ராமஸாமி அய்யரவர்கள் தலைமையின்கீழ் நடந்த கூட்டம் நமது ஆராய்ச்சிக் குரியதாகும்.

சென்னைக் கூட்டத்திலிருந்தவர்களைப் பற்றி "சுதேசமித்திர" னில் வெளி வந்துள்ள விபரத்தைப் பார்த்தால் அது ஒரு பிராமணர் கூட்டமென்றே தோன்றுகிறது. அதில் சென்னை ஹைக்கோர்ட்டு நீதிபதி திருவாளர். வி. வி. ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் பெரியோரின் புத்திசாலித்தனம் என்னும் பெயரினைக் கொண்டு ஓர் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். அவற்றுள் சில விஷயங்கள் பிராமணரல்லாதார் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டியது அவசியமாயிருக்கிறது.

### "ஜாத கர்மம்"

"குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரையில் நாம் செய்ய வேண்டிய சடங்குகள் பல விருக்கின்றன. நான் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்து ஒரு இந்திய சரித்திரத்தில் பிராமணர்கள் பணம் பெறுவதற்காக பல சடங்குகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று வாசித்திருக்கிறேன். ஒரு சரித்திரப் புஸ்தகத்தில் சரித்திர சம்பந்தமல்லாத விஷயம் இதை விட வேறில்லை. ஏனென்றால், அச்சடங்குகளைக் கவனித்தால் இவை பெரும்பாலும் பிராமணருக்காகவே விதிக்கப்பட்டிருப்பது விளங்கும். பிராமணரல்லாதாரிடம் பணம் பெற இதில் வழியில்லை. தம்மிட மிருந்தே பணத்தைச் சுரண்டிக் கொள்வதற்காகப் பிராமணர்கள் இவற்றை விதித்திருக்கிறார்களென்றால் இதை விட முட்டாள்த்தனமானது கிடையாது".

நீதி பதியவர்கள் (ஜாத கர்மம் முதலிய) சடங்குகளைக் கவனித்தால் இவை பெரும்பாலும் பிராமணருக்காகவே விதிக்கப்பட்டிருப்பது விளங்குமென்று கூறுகிறார். அவர் கூற்று பிராமணரல்லாதாரை யேமாற்றும் வேலை யென்பதை விளக்குகிறோம்.

மநுஸ்மிருதி 2-வது அத்தியாயம் 29-வது சுலோகம் "தொப்புள் கொடியறுப்பதற்கு முன்னம் சாத கர்ம மென்னும் சம்ஸ்காரம் புருஷனுக்குச் செய்ய வேண்டியது. அப்போது அந்தக் குழந்தைக்கு நெய், தேன் இவற்றில் சுவர்ணத்தை மந்திரத் தோடிழைத்து நாவிற்றடவ வேண்டியது".

31-வது சுலோகம் "பிராமணனுக்கு மங்களத்தையும், க்ஷத்திரியனுக்குப்பலத்தையும், வைசியனுக்குப் பொருளையும், சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற தான பெயரை இட வேண்டியது".

35-வது சுலோகம் "துவி ஜாதிகளுக்கு, பிறந்த வருஷத்திலாவது, மூன்றாவது வருஷத்திலாவது வேதத்திற் சொன்னபடி தர்மமாக சௌள கர்மஞ் செய்ய வேண்டியது".

மேல்க் கண்ட சுலோகங்களெல்லாம் பிராமணரை மாத்திரம் குறிப்பிடுகின்றதா? என்று கேட்கிறோம். ஷை ஸ்மிருதியிலேயே, பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் ஆகிய மூன்று வருணத்தாரும் துவிஜர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் நண்பர்கள் யாராவது இந்த மநு ஸ்மிருதி, பிராமணர்களுக்கு மட்டும் சொல்லப்பட்டிருக்கிற தென்று ஒப்புக் கொள்ள மாட்டார்களென்று நம்புகிறோம். நமது ஐயங்காரவர்களுக்கு மட்டும் இது பிராமணர்களுக் கென்று தெரிகிறது போலும்! ஆனால் பிராமணரல்லாதார்களும் நம்பும்படி செய்வதற்காக பிராமணனுக்கு பிராமணனே கொடுத்து வழி காட்டி, அவ்வழியிலேயே பிராமணரல்லாதாருஞ் சென்று, தான் நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்த பொருளை யெல்லாம் பிராமணனுக்கே தத்தஞ் செய்து அவனுக்கு அடிமையா யிருக்க வேண்டுமென்று மநுஸ்மிருதி கூறுவதாலும், பிராமணன் செய்யுங் குற்றங்கள் அறிந்து செய்யப்பட்டிருந்தாலும் அவனுக்குக் குறைந்த தண்டனையும், அதே குற்றத்தை பிராமணரல்லாதார் செய்தால் அதற்குப் பதின்மடங்கு அதிகத் தண்டனையும் விதிக்கப்பட்டிருப்பதாலும் திரு. அய்யங்காரவர்கள் பெரும்பாலும் பிராமணருக்காகவே என்னும் வார்த்தையை பெரும்பாலும் பிராமணரின் நன்மைக்காகவே என்று சொல்லி யிருந்தால் அதில் உண்மை யிருக்கிற தென்று நாம் ஒப்புக் கொள்ளலாம். கீழ் வரும் சுலோகங்கள் நமது கொள்கையை உறுதிப் படுத்துவனவாகும்.

மநுஸ்மிருதி 8-வது அத்தியாயம்.

#### 268-வது சுலோகம்.

"பிராமணன், க்ஷத்திரியனை அநியாயமாகத் திட்டினால் ஐம்பது பணத்தையும், அவ்விதமாக வைசியனைத் திட்டினால் இருபத்தைந்து பணத்தையும், சூத்திரனைத் திட்டினால் பன்னிரண்டு பணத்தையும் அரசன் தண்டம் விதிக்க".

#### 270-வது சுலோகம்.

"சூத்திரன் துவிஜர்களைக் கொடுமையாகத் திட்டினால் அவன் தாழ்ந்த விடமான காலிற்பிறந்தவனாகையால் அவன் நாக்கை யறுக்க".

#### 271-வது சுலோகம்.

"துவிஜர்களை பெயர், ஜாதி இவைகளைச் சொல்லி இகழ்ச்சியாகத் திட்டுகிற சூத்திரன் வாயில் பத்தங்குலமுள்ள எஃகுக் கம்பியைக் காய்ச்சி எரிய வைக்க".

#### 272-வது சுலோகம்.

"அகங்காரத்தால், நீ யிதைச் செய்ய வேண்டுமென்று பிராமணனுக்குத் தருமத்தை யுபதேசிக்கிற சூத்திரனுடைய வாயிலும் காதிலும் எண்ணெய்யைக் காய்ச்சி யூற்ற வேண்டியது".

#### 281-வது சுலோகம்.

"பிராமணனுடன் அவ ஞசனத்திலுட்கார்ந்த சூத்திரனை அவனுக்கு பிராணஹானிவராமலிருக்கும்படி இடுப்பிற் சூடு போட்டாவது, ஆசனத்தில் சிறிது அறுத்தாவது ஊரை விட்டுத் துரத்த வேண்டியது".

#### 374-வது சுலோகம்.

"சூத்திரன் காக்கப்படாத, துவிஜாதிகளின் மனைவியைப் புணர்ந்தால், பீஜம், சிசினம் இவைகளை அடியோடறுக்க வேண்டியது. காக்கப்பட்ட ஸ்திரீயைப் புணர்ந்தால் தேக முழுதும் வெட்டி அவனுடைய எல்லாப் பொருளையும் கவருக".

#### 383-வது சுலோகம்.

"கற்புடைய க்ஷத்திரிய, வைசிய ஸ்திரீயைப் புணர்ந்த பிராமணனுக்கும், அவ்வித சூத்திர ஸ்திரீயைப் புணர்ந்த க்ஷத்திரிய வைசியர்களுக்கும் ஆயிரம் பணம் தண்டம் விதிக்க".

#### 378-வது சுலோகம்.

"பிராமணன் தன் ஜாதி கற்புடைய ஸ்திரீயை ஒருக்கால் வலிமையாற் புணர்ந்தால் ஆயிரம் பணமும், அவளுக்குத் தன்னிடத்து விருப்ப மிருந்து புணர்ந்தால் ஐநூறு பணமும் தண்டம் விதிக்க".

#### 379-வது சுலோகம்.

"பிராமணனுக்குத் தலையை முண்டனஞ் செய்வது கொலைத் தண்டமாகும். மற்ற வருணத்தாருக்குக் கொலைத் தண்ட முண்டு".

#### 380-வது சுலோகம்.

"பிராமணன் எல்லாப் பாவஞ் செய்தாலும் அவனைக் கொல்லாமல், காயமின்றி அவன் பொருளுடன் ஊரை விட்டுத் துரத்த வேண்டியது".

#### 381-வது சுலோகம்.

"பிரம ஹத்தியை விட அதிகமான பாவம் உலகத்தில் கிடையாது. ஆதலால், பிராம்மணனைக் கொல்ல வேண்டுமென்று அரசன் மனதினாலும் நினைக்கக் கூடாது".

இதுதான் பெரும்பாலும் பிராமணருக்காக விதிக்கப்பட்டிருக்கும் தர்மமா? என்று திரு. அய்யங்காரைக் கேட்கின்றோம். இந்தக் கொடுமையான நூல் தான் ஆரியர்களின் நீதியை வெளிப்படுத்துகிற தரும சாஸ்திரமாம்.

ஓர்ந்து கண்ணோடாதிறை புரிந்தி (யார்மாட்டுத்
தேர்ந்து செய்வஃதே முறை

என்னும் தெய்வப் புலவர் நீதி நூலுக்கும் மநு (அ) தரும நூலுக்குமுள்ள பேதம் ஒளிக்கும் இருளுக்குமுள்ள பேதம், போலாம். இவ்வித அநீதியை வெளியிடும் நூல் தான் வருண தர்மத்தைக் கடைப்பிடிக்கும் அவரைப் பின்பற்றித் திரியும் பேத புத்தி யுடையோருக்கும் ஆதார வென்பதை நண்பர்கள் உணர வேண்டும்.

தீண்டாமையைப்பற்றி நமது நீதிபதி அய்யங்காரவர்கள் கருத்தென்ன வென்பதையுங் கவனிக்க வேண்டும்.

"தீண்டாமையைப் பற்றி ஒரு வார்த்தை. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரிடமும் தனி வசீகரந் தோன்றி யிருப்பது யாவரும் அறிந்துள்ள விஷயம். தீண்டப்படாதவரென்று தோன்றினால் அவரிடம் அவ் வசீகரமோ ஆத்ம ஞானமோ இல்லை யென்பது தான் பொருள். தீண்டாதாரை மதிப்பதில்லை யென்பது சரி யில்லை. நந்தன் ஆத்ம ஞானம் பெற்றதும் யாவரும் அவரைத் தெய்வமாகத் தொழ வில்லையா? அவ்வித மறிந்திருந்தும் பலாத்காரத்தைக் கொண்டு பிறரைத் தம்மிஷ்டப் பிரகாரம் நடக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்துவது அக்கிரமம். தீண்டப்பட வேண்டுமென்று பிரசாரஞ் செய்பவர்கள், அவர்க்குக் கல்வியும் ஆத்மஞானமும் புகட்ட முன் வந்தால், தீண்டாமை என்னும் அவச் சொல் சீக்கிரமே நீங்கிவிடும்".

குதிரை தூக்கிப் போட்டது மல்லாமல் குழியும் பறித்தது என்பதுபோல ஆரியப் பிராமணர்கள் தமிழ் மக்களையும், பூர்வ குடிகளையும் சூத்திரர், பஞ்சமர் என்று இழிவு படுத்தி சில அரசர்களைத் தங்கள் கையாளாக்கிக் கொண்டு அவர்களுக்குக் கல்வி யளிக்காமலும், செல்வ வான்களாயிருக்க விடாமலும் செய்ததோடல்லாமல், மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரிடமும் தனி வசீகரந் தோன்றி யிருப்பது யாவரும் அறிந்துள்ள விஷயம் எனச் சொல்ல முன் வரும் திரு. அய்யங்காரின் துணிவுதான் என்னே!

திரு. அய்யங்காரையும், அவரது குடும்பத்தாரையும் வயல்களிலும், வரப்புகளிலும் மண் வெட்டச் செய்து, அவர் உழவுத் தொழில் செய்யவும், அவர் தம் பெண்டு பிள்ளைகள் வயல்களில் நட்வு நட்டவும், களை பிடுங்கவும், புல்லறுக்கவுமாகிய வேலைகளைச் செய்யச் செய்து இவர்களது வசீகரத்தையும், இவர்களின் அடுத்த வாரிசுகளுக்கு கல்வியே கிடைக்க முடியாமலும், வயல் வெளிகளில் குடி யிருக்கவுஞ் செய்து அவர்களது தனி வசீகரத்தையும் பார்த்தால் தீண்டத்தகாதவர்கள் எப்படி உண்டானவர்களென்பது அங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும். அப்போது அய்யங்காரின் வாரிசுகளின் ஆத்ம ஞானமும், தீண்டத்தகாதவர்கள் ஆத்ம ஞானமும் வெட்ட வெளிச்சமாய்விடும்.

திருநாளைப்போவாராகிய நந்தனைத் தெய்வமாகத் தொழ வில்லையா? என்று திரு. அய்யங்கார் கேள்க்கிறார். நந்தனர் சரித்திரத்தை வாசித்தால் அவரை அடிமையாகக் கொண்ட பிராமணர் செய்த கொடுமையும், சிதம்பரம் தீக்ஷிதர்கள் தில்லையம்பலவாணரின் சொல்லைக் கூட லட்சியம் பண்ணாமல் நந்தனரை அக்கினி முழுகச் செய்ததும், எம் பெருமான் திருவருளால் நந்தனாது திருமேனி எவ்வித ஊனமுமடையாமல் வெளியேறி திருச்சிற்றம் பலமடைந்ததையுங் காணலாம்.

பிராமணர்களின் ஞான மின்மையும், கொடுமையும் நந்தனர் சரித்திர மூலம் வெளிப்படுகிறதுவு மன்னியில் அவர்களுக்கும், தெய்வ பக்திக்கும் வெகுதூர மென்பதையும் நிரூபிக்கின்றன.

ஆகவே திரு. அய்யங்காரவர்கள், ஆடு நனைகின்றதே யென்று ஓநாய் அழுத கதை போல், பிராமணரல்லாதார் துன்பங்கள் தமது வகுப்பினருக்கு நன்மை யளிக்கத்தக்கதென்று தெரிந்து கொண்டே தமது வருணாச்சிரம தருமப் பாட்டைப் பாடி நீலிக் கண்ணீர் வடிக்கிறாரென்பதே தேற்றம்.

இனி அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஸர். வி. பி. ராமஸாமி அய்யரவர்கள் முடிவுரையையுங் கவனிக்க வேண்டியதவசியம்.

### "இந்திய நாகரீகம்"

"நம் நாகரீகம் எத்தகையது? 6927 வருஷங்களாக இது நீடித்து வருகிறது. அழுகிப் போன எவ்வஸ்தும் வெகு காலம் நிலைப்பதில்லை. இதர வஸ்துக்களைப் போலவே நாகரீகமு மாகையால் இது இவ்வளவு காலம் போற்றப்பட்டு வருவதிலிருந்தே நம் நாகரீகத்தில் கெடுதலான விஷயமில்லை யென்பது விளங்கும்.

திரு. சட்ட மெம்பரின் வாதம் வெகு நேர்த்தியா யிருக்கிறது. அவர் சொல்லுகிறபடி 6927 வருஷங்களாக இந்திய நாகரீக மென்று நமது அய்யரால் சொல்லப்படுகிற நாகரீகம் மாறுதலடையவே இல்லையா? ரிஷிகள் கால மென்று சொல்லப்படுகிற ஒரு காலத்தில் பிராமணர்கள் செய்த யாகங்களும், அவைகளால் கொலை செய்து சாப்பிட்ட ஆடு, மாடு, குதிரை முதலியவைகளின் மாமிசங்களும், சோம யாகத்தில் சாப்பிட்ட கள்ளும் இப்போதும் சாப்பிடுகிறார்களா? கௌதம புத்தரின் காலத்தில் இவ்வித ஆபாச வழக்கங்கள் தொலைய வில்லையா? ஆரிய தருமப்படி சந்ததி விருத்திக்காகத் தன் மனைவியை மூத்த சகோதரனிடத்தில் சேர்த்து குழந்தை பெற்றுக் கொள்ளும் வழக்கம் இப்போதும் உண்டா? அசுவத்தாமா உற்பத்தியைப் போலவும், பாண்டு மைந்தர்கள் போலவும் தற்காலத்தில் எங்கேயாவது நடந்திருக்கிறதா? பாராசரர், பிராமணரானது போலவும், அவருக்குப் பிறந்த வியாசர், வேத வியாசரானது போலவும் இப்போதும் உண்டா? கல்வி கற்கும் பிரம்மச்சாரிகள் முற்காலத்தில் கலியாணஞ் செய்து கொண்டா குருகுல வாசஞ் செய்தார்கள்? தற்காலத்துப் பிராமணர்களின் ஆசாரங்கள் தானென்ன? ஆரியர்கள் குடியேறி தங்கள் நாகரீகத்தை இந்திய நாட்டில் பரப்புவதற்கு முன் இந்தியா எந்த நாட்டுக்காவது அடிமைப்பட்டுக் கிடந்ததா? அடிமைப்படுவதற்குக் காரணமாயும், அடிமைப்படுத்தி வைப்பதாயும் இருந்தது உங்கள் ஆரியக் கொள்கைகளல்லவா? 30 கோடி ஜனங்களிருந்தும் சுயமரியாதையை யிழக்கும்படி செய்தது ஆரிய நாகரீகமல்லவா?

அந்தோ! ஐயரவர்களே! அய்யங்காரவர்களே! உங்கள் நாகரீகமானது பல தடவை அழிந்து, உயிரிழந்து, அந்நிய மத சித்தாந்தங்களை நீங்கள் ஏற்று மாற்றிக் கொண்டதால் இன்னும் உயிருடன் இருப்பதுபோலத் தோன்றுகிறதே யல்லாமல், உண்மையில் உங்கள் நாகரீகம் உயிரிழந்த பிணமாய்க் கிடக்கிறதை நீங்கள் காண முடிய வில்லையா? உங்கள் வருண தர்மங்கள் அழிந்து ஒழிந்து இருந்த இடமுந் தெரியாமல் புல் முளைத்துப் போகுங் காலம் இதோ சமீபத்தில் வந்துவிட்டது! சுயமரியாதை என்னும் சூரியன் உதயமாகி விட்டான். இன்னும் அஞ்ஞான அந்த காரத்தில் கிடந்து உழலாதீர்கள். "கால மறிந்து செய்யாதான் கோல மழிந்து குரங்காவான்" என்பதை யறிந்தேனும் சம தருமத்தைக் கடைப் பிடியுங்கள். வருண தருமங்களை உங்கள் சந்ததிகளும் கைக் கொள்ளும்படி நீங்கள் செய்யும் முயற்சிகள் உங்கள் சுயமரியாதையைப் புதைக்கும் சவக் குழிகளாக இல்லாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் தூய உபதேசங்கள் உங்கள் உள்ளத்திலுள்ள அகங்காரத்தைப் போக்கி அன்பை உண்டாக்குமென்று நம்பி அதைக் கீழே குறித்து இவ்வாராய்ச்சியை முடிக்கிறோம்.

"தாயே! நான் பெரியவனென்றும், நான் பிராமணனென்றும், அவர்கள் தாழ்ந்தவர்களென்றும், பறையர்களென்றுமுள்ள எண்ணத்தை என் உள்ளத்தினின்றும் அகற்றி விடு. அவர்களும் அத்தனை வடிவமாய்த் தோன்றும் நீயே யன்றி வேறு யார்?".

சமதரும வாதி,

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நமக்குத் தீங்கு செய்பவர் யார்?

திருச்சூரில் மகாத்மா காந்தியடிகள் மாணவர்களிடையே பின்வருமாறு கூறினர்:—

கடவுளிடம், எனவே உங்களிடமும், ஒரு பொழுதும் நம்பிக்கையை இழக்காதேயுங்கள். ஓரே ஒரு தீய எண்ணத்திற்கு ஓரே ஒரு பாவ எண்ணத்திற்கு, இடந்தந்து விட்டீர்களானால், அந்த நம்பிக்கை போய்விடும். பொய், தர்மசிந்தனையின்மை, பலாத்காரம், காம இச்சை ஆகிய இவையாவும் கடவுளிடம் நம்பிக்கையுடையோர்க்கு அந்நியமானவை. இவ்வுலகத்தில், நம்மை விட நமக்குப் பெரிய எதிரிகள் எவருமில்லை என்பதை நினைவில் வையுங்கள். பகவத்கீதை, அநேகமாக ஒவ்வொரு சுலோகத்திலும் இதைக்கூறுகிறது. கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தின் உபதேச சாரமும் இதுவேயாக நான் காண்கிறேன். கொரானை நான் படித்ததின்றும் இதே முடிவுக்கு வந்திருக்கிறேன். ஒரு பாவ எண்ணத்தின் தூண்டுதலின்றி, எந்தப்பாவச் செயலும் இவ்வுலகில் ஒரு பொழுதும் செய்யப்படுவதில்லை. உங்கள் இதயத்தில் வூறும் ஒவ்வொரு எண்ணத்தின்மீதும் கடுமையான எச்சரிக்கையை நீங்கள் கைக்கொள்ளவேண்டும். அநேக மாணவர்கள், இளைஞரும் சிறுமிகளும் ஆகிய இருபாலாரும், தங்கள் தங்களது அறிவைக்கொண்டு எனது சொற்களின் வன்மையைத் தெளிந்து கொண்டாலும், தங்கள் கருத்தை அடக்கியாளத் தங்களால் இயலவில்லையே என்று என்னிடம் அநேகந்தடவை கூறியுள்ளார்கள். இவ்வாறு அவர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டு, எக்கத்திற்கு இடமளித்து, அதன்மேல் தங்களைத் தூண்டுவதற்கான சில தீய புத்தகங்களை அடைந்து, தீய எண்ணங்களை வளர்க்கிருர்கள். நமக்குள் நிகழும் இரு முறைகளின் வேற்றுமைகளைக் கூர்மையாய் வகுத்துக்கூற விரும்புகிறேன். பக்குவமடைந்தவர்களைத் தவிர்த்து பிறர் ஒவ்வொருவரது உள்ளத்திலும் தீய எண்ணங்கள் எழும். எனவே, நம்மைக் கெட்ட எண்ணங்களினின்றும் காக்குமாறு கடவுளை நாம் விடாமல் பிரார்த்தித்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். இந்த முறை நமக்கு நன்மையைச் செய்வதாகும். கெட்ட எண்ணங்களைக் கருதி, அவற்றில் களிப்படைவது மற்றமுறை. இந்த முறை மிகுந்த ஆபத்தையும் தீங்கையும் விளைவிப்பதாகும். உங்கள் முழு வன்மையுடனும் போராடுமாறு, நான் அழைப்பது இந்த முறையையே. இது மிக எளிதாகச் செய்யக் கூடியது. நமது உள்ளத்தில் இடந்தா அல்லது துணிவளிக்கத்தக்க விருந்தினர் (கருத்துக்கள்) யாவரென நாம் ஒவ்வொருவரும் தேர்ந்து கொள்ளமுடியும். எதிரி தாக்குவதை நாம் தவிர்க்க முடியாமலிருக்கலாம். ஆனல், எதிரிதாக்குவதை எதிர்க்கும் முயற்சியில் நம் உயிரையும் விட்டுவிடுவது நம் கையிலிருக்கிறது. இது ஒரு மருந்து.

## "இலங்கை பாண்டிய நாடார் சங்கம்" கொழும்பு.

"இலங்கை பாண்டியநாடார் சங்க"த்தின் அக்டோபர் மாதத்திய கவுன்ஸில் மீட்டிங்கு சனிக்கிழமை 22-ம் ௳ 3—30 மணிக்கு ஒய். எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெற்றது. ஸ்ரீமான் ஒய். ஆசிர்வாதம், வைஸ் பிரசிடெண்ட் தலைமை வகித்தார்.

முதன்மையாக முன் கூட்டத்தில் நடந்த தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட பின், ஐக்கிய நாணயக் கூட்டுறவு சங்கத்தைப்பற்றி ஸ்ரீமான் ஆசிர்வாதம் அவர்கள் அரசாங்கத்திற்கு எழுதி யிருப்பதாகவும், கூடிய சீக்கிரம் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டரவர்கள் நமது கூட்டத்தில் வந்து உபந்நியாசஞ் செய்வார்கள் என்பதாகவும் குறிப்பிட்டார்கள். ஐக்கிய நாணயக் கூட்டுறவு சங்கம் ஒழுங்காய் ஸ்தாபிக்கப்படும்

## முத்துப் பதக்கம்.

சண்டமாருதத்திலடிபட்டுப் பறக்கும் பஞ்சானது தன் வேகத்தைக் குறித்து வியந்து கொண்ட தொக்கும் பிறர் உதவி பெற்று அடைந்த வெற்றி பற்றி தன்னைப் பெருமைப் படுத்திக் கொள்ளல்.

* *

ஆயுளுள்ள நோயாளியும், அதிஷ்டமுள்ள பண்டிதனும் கூடுமிடத்து மரணம் மரணமாம்.

* *

பணத்தை மதியாத் தொழிலாளனும், தொழிலை மதியா முதலாளியும் சேரும் இடத்து தொழில் நியங்குவதரிது.

* *

இருவர் ஒருவர்க் கொருவர் சிநேக பாவமாய்த் தாராளமாய்ப் பழகி விட்டு, நீண்ட நாட் பிரிவின் பின் சந்திப் பேற்பட்ட சமயத்து முந்திய தாராளம் கையாளக் கூசுவதியல்பு.

* *

கெட்ட காரியத்தி லீடுபட்டுக் களிக்கும் ஒருவனுக்கு அதினின்றும் விடுவிக்க புத்தி கற்பிக்கும் ஒருவன் முதலில் பைத்தியகாரனவன்; பின் அக்கெட்ட காரியத்தால் கஷ்டப்பட்டு உழலும்போது தோன்றி மறைந்த தெய்வமாகிறான்.

* *

எல்லோரும் நல்ல பலனைத்தான் எதிர் பார்க்கின்றார்கள். அவ்வெதிர் பார்ப்பெலாம் பலிதமாவதென்றால் உலகத்தில் பாகுபாடுகளில்லை.

* *

ஞானம் எரிந்து கொண்டிருக்கும் விளக்குக்குச் சமானம். அந்த ஞான விளக்கு சிந்தனை யெண்ணெய் வார்க்கப் பெறுவிட்டால் அணைந்து போம்.

* *

ஒரு காரியத்தை அதில் அனுபவமில்லா வொருவனின் மேற் பார்வையிலிறுத்துவது நஷ்டக் கணக்கில் தொகை யதிகம் காணுவதில் முடியும்.

* *

தண்ணீர் வெந்நீராலும் நெருப்பை யவித்து விடுவதே போல் அதனதன் குணம் ஒருபோதும் மாறுது.

* *

ஒவ்வொருவரும் பேசும்போது தன் பேச்சின் மதிப்பை யளந்து கொண்டே போகிறார். இத்தன்மையிலார் பேச்சே பிதற்றல் எனப்படும்.

---

வரை வேலை தேடும் சபையைப்பற்றிய ஏற்பாடுகள் ஒத்திவைக்கப்பட்டன.

### பணத்தைப் பேங்கில் போடுதல்.

தர்ம கர்த்தாக்கள் பேரால் பணம் போட முடியாதென்று ஈஸ்டர்ன்பேங்க் மானேஜர் எழுதிய கடிதம் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. பின்னர் சங்கத்தின் பேரால் பணத்தைப் போட்டு வைக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பிரஸிடெண்டும், பொக்கிஷதாரும் கணக்கைப் பேங்கில் நடத்திவர வேண்டுமெனவும் தீர்மானிக்கப் பட்டது. பொக்கிஷதார் சமர்ப்பித்த கணக்கும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அங்கத்தினர்—கீழ்க் கண்டவர்கள் அங்கத்தினராகச் சிபார்சு செய்யப் பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டார்கள்.

ஸ்ரீமான்களான பி. எஸ். ராஜமணி, எஸ். வி. எம். விசுவாச நாடார், டி. முத்துக்கருப்ப நாடார், ஏ. டி. கோயில்பிள்ளை நாடார்.

### பிரசிடெண்டின் உயரிய பதவி.

சங்கத்தின் பிரசிடெண்டு ஸ்ரீமான் ஜீ. பி. ஆர்தரவர்கள் புதிய எலெக்டிரிக் டிப்பார்ட்மெண்டுக்கு தலைமைக் குமஸ்தாவாக அரசாங்கத்தாரால் உயர்த்தப்பட்டதைக் குறித்து கவுன்சிலர்கள் மகிழ்வடைந்து ஸ்ரீ ஆர்தரவர்களை வாழ்த்தி ஒரு தீர்மானம் காரியதரிசியால் அனுப்பப்பட வேண்டுமெனவும் நிறைவேற்றி வைத்தார்கள் என்று ஜெனரல் செக்ரட்டேரி எழுதுகிறார்.

சங்கத்தின் பேரால் பணம் ஈஸ்டர்ன் பேங்கில் போட்டாயிற்றென்பதாக பின் செய்தி கிடைத்திருக்கிறது.

## முத்து, முத்தம், முத்தி.

முத்த மிடுதல் என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிகழ்வதில்லை. அன்பு மிகுதிப்பட்டபோது வெளிப்படும் உட் குறிப்பாயிருக்கின்றது. தாய் மக்களிடத்தும், குழந்தைகள் அன்னையிடத்தும், ஸதிபதிகள் பரஸ்பரமும் முத்த மிட்டுக் கொள்ளுகிறார்கள். முத்து அதிக விலை பெற்ற பொருளாக மதிக்கப்படுவதுபோல் முத்தமும் சிலாக்கியமாய் கொண்டாடப்படுகிறது. முத்து கிடைப்பது கஷ்ட சாத்தியமாயிருப்பது போலவே முத்தமும் அருமையாய்ப் பெறப்படுகிறது. இக்காரணங்களால் முத்துக்குள்ள பெருமையை நோக்கி இதற்கும் முத்தம் எனப் பெயரமைந்ததோ வென்பதும், முத்தம் என்ற பதம் முத்து என்ற பதத்தினின்றும் தோன்றிற்றோ வென்பதும் ஓர் ஆசங்கை. பின்னும் முத்து என்பதின் அருமை கருதியே, முத்து என்பதினின்றும் முத்தி என்றாயிற்றோ வென்றும் ஐயுறத்தக்கதாயுள்ளது. முத்து கடலில் உற்பத்தி. முத்து விரும்புவோன் கடலில் மூழ்கியே எடுக்க வேண்டும். அவ்வாறுவே, மாதர், மக்கள் இவர்களின் முத்தம் அபேக்ஷிப்போர் ஸம்சாரமாகிய சமுத்திரத்தினுள் மூழ்கியே பெறல் வேண்டும். அதனுள்ளேயே மூழ்கி விடப்படாது. அப்படி மூழ்கி விடுபவன் தனுக்குத் தானே நாசத்தைத் தேடிக் கொள்பவனாகிறான். கடலில் மூழ்கியவன் தன் கைக்கு முத்து கிடைத்து விட்டபோதிலும், உடனே மேலெழாமல் அவ்விடத்திலேயே—அம்முத்துக்களிருக்கு மிடத்திலேயே சற்று தாமதிக்க முயலுவானயின் உடனே அவன் சுவாசம் விட முடியாமல் மரணபுரம் சேர்கின்றான். அவன் கையில் முத்துக் கிடைத்திருந்தும் அதை யநுபவிக்கும் வலிமைகுன்றி எந்த முத்து தனக்கு சந்தோஷம் தருமென்று எண்ணினனோ அந்த முத்தைக் கொண்டே தனக்குக் கெடுதியை வருவித்துக் கொள்கிறான். அதுபோலவே முத்தம் விரும்பி ஸம்ஸாரக் கடலினுள் மூழ்கச் செல்வோரும் தமக்கு முத்தம் கிடைத்த வுடனேயே அக்கடலினின்றும் மேலெழ முயல வேண்டும். அங்ஙனம் முயன்று மேலெழுந்து வந்ததும் முத்தத்தின் பயன்களை அனுபவித்து ஆனந்தப்படும் சக்தியைக் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

[அதாவது, ஸம்ஸாரத்துடன் இருந்தாலும், அதில் தாமரை யிலை நீராகப் பற்றற்ற மனதுடன் வாழ்ந்து தனது சிந்தனை யனைத்தையும் கடவுளிடத்தில் திருப்பி அந்த ஸாயுச்சிய பதவியை அடைவதற்கு அம் முத்தங்களையே (அதாவது, அம் முத்தங்களை உற்பத்தி செய்கிறவர்களையே) தனக்கு சகாயமான கருவிகளாகப் பண்ணிக் கொள்ள வேண்டும்.]

கடலில் மூழ்குபவருக்கெல்லாம் முத்துக் கிடைத்து விடுகிறதில்லை. ஏதோ ஓர் சிலர் தாம் அருமையாய் அடையத் தகுதியுடையோராகின்றனர். அங்ஙனமே ஸம்ஸார ஸமுத்திரத்தில் மூழ்குவோரெல்லோருக்குமே இனிய முத்தங்கள் சித்திக்கிறதில்லை. பூர்வ புண்ய வசம் பலிக்கப் பெற்ற சிலருக்கே அந்தப் பாக்கியம் சிலாக்கியமாய் ஏற்படுகிறது. முத்தைக் காட்டிலும் முத்தம் சிறந்தது. காதலனுங் காதலியும், தாயும் மக்களும் ஒன்றின் பின் ஒன்றாக, வரிசை வரிசையாக உண்டாக்கு கிற முத்தங்கள் கோர்க்கப்பட்ட மாலைக்குள்ள பெருமையும் சிறப்பும் எண்ணற்ற விலை மதிப்புள்ள முத்து மாலைக்கும் ஒருபோதும் கிடைக்க மாட்டாது. இவ்வாறான சிறப்பு மிகுந்த முத்தங்களின் முடிவு முத்தியில் முடிவதாக இருக்கும்படி சீர்திருத்திக் கொள்ள முற்படுபவனெவனோ அவனே மாண்டும் மாளாப் பெயர் பூண்டோன் எனப்படுவான்.

முத்து, முத்தம், முத்தி என்னும் இம் மூன்றினையும் புருஷார்த்தங்களில் மூன்றாகிய பொருள், இன்பம், வீடு என முறையே பாராட்டிக் கொண்டாடுக. இம் மூன்றுக்கும் அறத்தின் துணை முன்னிற்க.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பெ. நடராஜ்,
சந்தையடியூர்.

## துண்டுத் துணுக்குகள்.

பர்மாவில் ரூஸ்கோவென்னும் இடத்துச் சிறைச்சாலையினின்றும் தப்பியோடிய கைதிகள் பதினொருவரில் ஐவர் மீண்டும் பிடிபட்டும், ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டும் போனராம்.

* *

லண்டனில் டாக்டர் டோரத்திலோகன் என்ற ஆங்கிலப்பெண் இங்கிலீஷ் கால்வாயைத்தாண்டிவிட்டதாகப்பொய் சொல்லினரென வழக்குத் தொடரப்பட்டு 150 பவுன் அபராதமும், 10கினி நஷ்ட ஈடும் விதிக்கப் பெற்றனர்.

* *

ரங்கூனுக்கடுத்த கய்யான் பகுதியைச் சார்ந்த மிமி என்ற கிராமத்தில் ஒரு பன்றிக்குட்டி யானைத் துதிக்கையுடன் பிறந்திருக்கிறதாம்.

* *

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையிலுள்ள கடலை சாவர்ட் எனும் ஆங்கிலர் சைக்கிளால் கடக்க முயல்கிறாராம். சைக்கிள் நீரில் ஓடச் சாதனங்களமைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

* *

லாஸ் எஞ்சலஸ் எனும் நகரின் வியாபாரச்சங்கத்தார் காக்ஷி சாலையில் 100—வயதுள்ள ஆமையொன்றிருக்கிறதாம்.

* *

துருக்கி மண்ணெண்ணெய்க் கம்பெனியார் எடுத்த ஒரு எண்ணெய்க் கிணற்றில் நாளொன்றுக்கு 5000 டன் வீதம் எண்ணெய் பாய்ந்தோடியதாம்.

* *

கும்பகோணம் காளேஸ்வர சுவாமி கோவிலில் ராமச்சந்திர ஐயர் என்ற பிராமண வாலிபர் விக்கிரகத்திலுள்ள நகையைத் திருட முயன்றபோது பிடிபட்டு போலீஸ் காவலில் இருந்து வருகிறார்.

* *

இந்துக்களுக்கு விரோதமாய் நிகழும் விஷயாதிகள்பற்றி யோசிக்க பெத்தியாவில் இந்துக்கள் கூடிய ஓர் பிரத்யேகக் கூட்டத்தில் ஓர் முஸ்லீம் இந்து வேடந்தாங்கி கலந்துகொண்டதாகவும், பின்னர் இன்னாரென தெரிந்து போலீஸ் வசம் ஒப்புவிக்க சோதனையின் மேல் ஒரு கத்தியும் கடிதமும் வைத்திருந்ததாகவும், 500 ஜாமீன் விடுதலை பெற்றதாகவும் தெரிகிறது.

* *

பம்பாய் கவர்னரின் சமீபத்திய டெக்கான் சுற்றுப்பிரயாணத்தின் போது அவர் நாசிக்கிலிருந்து புனாவுக்கு ஸ்பெஷல் வண்டியில் போகையில் அவரைக் கொல்ல சூழ்சி நடந்ததாக "டைம்ஸ்ஆப் இந்தியா" பத்திரிகை கூறுகிறது.

* *

காசி முனிஸிபாலிட்டி சுகாதார இன்ஸ்பெக்டரை முனிஸிபல்தோட்டி யொருவன் அடித்துவிட்டு ஒரு வருடக் கடுங்காவல் தண்டனையும் ஒருவருட நன்னடக்கை ஜாமீனும் விதிக்கப்பட்டான்.

* *

கும்பகோணம் ஸ்டாம்பு வெண்டர் சுப்பிரமணிய ஐயர் மனைவியை ஷையூர் வக்கீல் குமஸ்தா ராமச் சந்திர ஐயரும், மாரியப்பசெட்டியும் கூட்டிக்கொண்டு போனதாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் 1-வது எதிரி குற்றவாளி யென ருஜுவாகி 2-வது எதிரி விடுதலையானர். எதிரி தரப்பு சாக்ஷியங்களை விசாரிக்க வாயுதா வேற்பட்டிருக்கிறது.

---

### இனம்! இனம்!!

படுக்கை யறையை அலங்கரிக்கும் பிரெஞ்சு லேடிகளின் அழகிய பெட்ரூம் போட்டோ படங்கள் 50 எங்களுடைய உயர்ந்த 14 கே. டி. பொன் டன் பேனு வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் இனம் கொடுக்கப்படும். உடனே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபாய் 2—8—0. விலாசம்:—

மில்லர் வாச் கம்பெனி,
38. பரமானந்த முதலி தெரு,
ஜியார்ஜ் டவுன், மதறாஸ்.